# தமிழரசு

16-10-1982 75 காசு.

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — புரட்டாசி 30








அண்ணல் காந்தியடிகளின் 114-வது பிறந்த நாளான 2.10.'82 காலையில் சென்னைக் கடற்கரையிலுள்ள காந்தியடிகள் சிலைக்கு மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களும் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர்.அவர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர்.



முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக தமிழ்
நாடு மின் வாரிய அலுவலர்கள் சார்பில் மின்வாரியத் தலைவர்
திரு பி. முராரி, இ.ஆ.ப. அவர்கள் ரூ 1,02,000-க்கான காசோ
லையையும், மின்வாரியப் பொறியாளர் சங்கத்தின் சார்பில்
அதன் தலைவர் திரு எ. பி. கந்தப்பன் ரூ 1,00,001-க்கான
காசோலையையும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம்
1.10.'82 அன்று வழங்கினார்கள். மாண்புமிகு மின் துறை
அமைச்சர் திரு எஸ்.ராமச்சந்திரன் அவர்களும் உடனிருந்தார்.

# குழந்தைகளைக் காக்கும் அரசு



கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மாதவலாயம் சத்துணவு மையத்தில் 13-9-82ல் மேதகு ஆளுநர் அவர்கள், குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குகிறார்.

மனித சமுதாயத்தின் எதிர்காலம் குழந்தைகளின் சிறப்பான வளர்ச்சியில் தான் இருக்கிறது. அதற்காகத்தான் உலகம் முழுவதும் குழந்தைகள் ஆண்டு கொண்டாடப்பட்டது. குழந்தைகளுக்கான நலத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டன.

தமிழகத்தைப் பொறுத்தவரை குழந்தைகளுக்காகச் சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைக்கப் பட்டுள்ளது.

மகப்பேறு மருத்துவ மனைகளும் குழந்தைகள் மருத்துவ மனைகளும் அதிகமாகி இருக்கின்றன. தடுப்பூசிகளும், சொட்டு மருந்துகளும் பொது நிறுவனங்கள் மூலம் குழந்தைகளுக்குப் போடப்படுகின்றன.

எல்லாவற்றையும் விடச் சிறப்பாக சத்துணவுத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இத்தகைய நடவடிக்கைகளால் குழந்தைகளைப் பாதுகாக்கத் தமிழக அரசு நல்ல பணிகளைச் செய்து வருகிறது.

[மேதகு ஆளுநர் திரு. எஸ். எல். குரானா அவர்கள் குழந்தைகள் அறக்கட்டளை சார்பில் கட்டப்படும் மருத்துவமனையின் அடிக்கல் நாட்டு விழாவில் (4.10.'82) ஆற்றிய உரையிலிருந்து].


# தமிழரசு

மலர் : 13 இதழ் : 8

16–10–1982

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — புரட்டாசி 30


## அட்டைப்படத்தில்

வனவிலங்கு வார விழாவில்

மேதகு ஆளுநர் அவர்களும்

மாண்புமிகு முதல்வர் அவர்களும்



# குன்றாப் புகழ்க் குற்றால முனிவர்

பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழகத்தின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கிய நூற்றாண்டாகும். அதிலும், அந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதி, இருபதாம் நூற்றாண்டிற்குப் பெருமை சேர்த்த பகுதியாகும்.

ஆம்; அந்தக் காலக்கட்டத்திலேதான் இந்த நூற்றாண்டின் இந்தியத் துணைக்கண்ட மக்களுக்கு—குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பெருமையைச் சேர்த்த பேரறிஞர்கள், விடுதலை வீரர்கள், தமிழ்ச் சான்றோர்கள் தோன்றி நமது வாழ்நாளிலே வாழ்ந்து நமக்கெல்லாம் வழிகாட்டிவிட்டு மறைந்திருக்கிறார்கள்.

அத்தகைய மாபெரும் தமிழ்ப் பெரியார்களில் ஒருவராக வாழ்ந்து மறைந்த மாமனிதர் தான் ரசிகமணி திரு டி.கே.சி. அவர்கள்.

''டி.கே.சி.'' என்றும், ''ரசிகமணி'' என்றும், ''குற்றால முனிவர்'' என்றும் அன்போடு அழைக்கப்பெற்ற இந்தப் பெருமகனார் தமிழறிஞர்களிலே ஒரு வள்ளலாகவும், தமிழ் வள்ளல்களிலே ஒரு புலவராகவும் விளங்கிய பெருமைக்குரியவராவார்.

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் நாட்டின் நுண்கலைகள் ஆகிய அனைத்திற்கும் ஒரு சின்னமாக விளங்கியவர் டி.கே.சி. தமது வாழ்வு முழுவதையும் முத்தமிழ் பரப்பும் தொண்டுக்காகவே செலவிட்டு, வாழ்நாள் முழுவதும் ''தமிழ் ''தமிழ்'' ''தமிழ்'' என்பதையே தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்து மறைந்த தமிழ்ப் பெருமகன் ரசிகமணி டி.கே.சி.

அந்தக் காலத்தில், படித்த மக்களிடையே ஆங்கில மோகம் தலை தூக்கி நின்றது. தமிழிலே எழுதுவதும், பேசுவதும் கவுரவக் குறைவு என்ற அடிமை மனப்பான்மை படித்த மக்களிடையே காணப்பட்ட காலம். இந்தச் சூழ்நிலையில், வழக்கறிஞர் பட்டம் பெற்றவரும், ஆங்கில இலக்கியங்களை ஆழ்ந்து கற்றவருமான டி.கே.சி. ஊக்கத்தோடு தமிழ் மறுமலர்ச்சிப் பணியினைச் செய்யத் தொடங்கினார்.

தனது வீட்டின் பெரிய முற்றத்தில் உள்ள வட்டமான தொட்டியிலே அமர்ந்து இலக்கிய ஆய்வுகளை நடத்தும் முறையை அறிமுகப் படுத்தினார். அதனால், 'வட்டத் தொட்டி' என்ற பெயரும் உருவாயிற்று. அவருடைய வட்டத் தொட்டியிலே, வழக்கறிஞர்கள், ஆங்கிலப் பேராசிரியர்கள், நீதிபதிகள், அரசியல் தலைவர்கள், சமுதாய நிலையிலே பெரிய பெரிய பதவிகளில் இருப்பவர்கள் போன்ற பலதரத்தினரும் வந்து கலந்துகொண்டார்கள். இதனால் டி.கே.சியின் 'வட்டத்தொட்டிக்கு' மக்களிடையே ஓர் மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டது.

தமிழைப் புறக்கணித்து ஆங்கில மோகத்தில் ஆழ்ந்திருந்தவர்கள் எல்லாம் மதிப்பும் ஆர்வமும் கொண்டு டி.கே.சி.யின் தமிழ் மறுமலர்ச்சிப் பணிக்கு ஆதரவு தந்தார்கள்.

இதனால், மூதறிஞர் ராஜாஜி, ஒரு முறை வட்டத் தொட்டியைத் 'தமிழுக்குக் கிடைத்த வீரசேனை' என்றே அழைத்தார்.

'வட்டத் தொட்டியின் மூலம் டி.கே.சி. செய்து வந்த தமிழ்த் தொண்டோடு கூடவே திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பெரிய செல்வந்தர் என்ற முறையிலே அவர் அரசியலிலும் ஈடுபட்டார்.

அந்தக் காலத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில், நீதிக் கட்சியானது மிகவும் செல்வாக்குப் பெற்று பரவி இருந்தது. எனவே 1927 முதல் 1930 வரையில் டி.கே.சி. நீதிக் கட்சியின் சார்பில் சட்டமன்ற மேலவையில் உறுப்பினராகப் பணியாற்றினார். அப்போது டி.கே.சியின் தமிழ்ப்பணி சென்னையிலும் பரவியது.

*1930* முதல் *1935* வரை, டி.கே.சி. சென்னையில் அறநிலைய ஆணையாளராகவும் பணிபுரிந்தார். கோவில்களை ஒட்டி வளர்ந்த அருங்கலைகளான பரத நாட்டியத்திலும், திருமுறை தமிழிசையிலும் டி.கே.சி. ஒரு மறு மலர்ச்சியை உண்டாக்கினார். கோவில்களையே சார்ந்து வளர்ந்த இந்தக் கலைகளை, இசை அரங்குகளிலும், சபைகளிலும் வளர்ப்பதற்குரிய முறையில் பல வழி

வகைகளை டி.கே.சி. உருவாக்கினார். செட்டி நாட்டரசர் அண்ணாமலையார் அவர்களின் துணையோடு தமிழ்நாட்டின் தமிழ் இசையின் மறு விழிப்பிற்கு வழி வகுத்த பெருமை டி.கே.சி. அவர்களையே சாரும்.

அவருடைய முயற்சியினால், தமிழிசை இயக்கமும், பரதநாட்டிய மறுமலர்ச்சியும் வேகமாகச் செயல்பட்டதோடு, பல அரசியல் தலைவர்களும், பத்திரிகை ஆசிரியர்களும், செல்வந்தர்களும், இந்த இயக்கத்தில் முழு மனத்தோடு கலந்துகொள்ளும் நிலையும் ஏற்பட்டது.

அவரது 'வட்டத் தொட்டி'யிலே, இலக்கியம், கலைகள் ஆகியவற்றைத் தவிர வேறு எவ்விதமான கட்சி அரசியலுக்கும் டி.கே.சி. இடம் கொடுக்க மாட்டார். இதனால், அவருடைய 'வட்டத் தொட்டி'யிலே தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், திரு ஆர். கே. சண்முகம் செட்டியார், திரு.பி.டி. இராஜன் போன்ற



பெருந் தலைவர்களெல்லாம் 'முத்தமிழ்' என்ற ஒரே பிணைப்பில் கட்டுண்டு கட்சி வேறுபாடு, சாதி சமய வேறுபாடு இன்றிச் சரிநிகர் சமமாகக் கலந்து உரையாடுகிற நிலை உருவாகியது.

தம்முடைய இளமைக் காலத்தில் டி.கே.சி. பல தமிழ்ப்பாடல்களைத் தாமே இயற்றினார். பிற்காலத்தில், தாமே பாடல்களைப் புனைவதைவிட, தமிழ் மொழியில் உள்ள பழம் பாடல்களை மக்கள் சுவைக்கும்படி விளக்குவதே சிறந்த தொண்டு என்று கருதி அதையே தமது வாழ்வுப் பணியாகக் கொண்டார். தம் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கம்பராமாயண ஆராய்ச்சியிலே செலவிட்டு, புதிய பதிப்புகளை வெளியிட்டார். கம்பருடைய பாடல்களை இதயம் தோய்ந்து அனுபவித்த காரணத்தால் கம்பருடைய தனிப் படிவத்தை அவர் இனங்கண்டு கொண்டார். வழக்கத்தில் உள்ள கம்பராமாயணப் பதிப்புகளில் இடைச்செருகல் ஏராளமாக இருப்பதை அவரால் கண்டுகொள்ள முடிந்தது. வேறு யாருக்கும் ஏற்படாத துணிவோடு இந்த இடைச்செருகுக் கவிதைகளை எல்லாம் தயக்கம் இன்றிக்களைந்து விட்டு மிச்சம் உள்ள பாடல்களை மட்டுமே கொண்ட புதிய பதிப்பை அவர் வெளியிட்டார்.

டி.கே.சி. செய்து வந்த இலக்கியத் தொண்டில் ஒரு பெரிய சிறப்பு என்னவென்றால், அவருடைய தமிழ், படித்தவருக்கும், பாமரருக்கும் புரிகிற எளிய தமிழாக இருந்தது. பேச்சுத் தமிழை இலக்கிய விளக்கத்திற்குப் பயன்படுத்தி வெற்றி பெறலாம் என்பதை மெய்ப்பித்த டி.கே.சி., அதோடு பதவுரை, பொழிப்புரை, கருத்துரை என்று பாடல்களுக்கு விளக்கம் சொல்கிற முறையை மாற்றி இலக்கியத்தை மக்கள் ரசிக்கும்படியாக இலக்கிய ஆனந்தத்தோடு வழங்குகிற ஒரு புதிய முறையை டி.கே.சி. கையாண்டார். இதனால் அவருடைய சொற்பொழிவுகளும், கட்டுரைகளும், விறுவிறுப்பும், உயிர்த்துடிப்பும் ஒரு தனித்தன்மையும் கொண்டு விளங்கின.

தமிழ் மொழியில் இலக்கியங்களை அனுபவித்து வருவதோடு மட்டும் அல்லாமல், எல்லா அறிவியல் கலைகளையும், தமிழிலேயே கற்பிக்க முடியும் என்று உறுதியாக நம்பியவர் டி.கே.சி.

தாய்மொழி மூலம் அறிவியல் கலைகளைக் கற்பிக்க வேண்டுமென ஓர் இயக்கம் தொடங்கியபோது அந்த முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தேடித் தந்தவர் டி.கே.சி. பல ஆண்டுகளுக்கு முன்பு தாய்மொழிக் கல்வி பற்றி சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில அறிஞர்கள் அடங்கிய உட்குழுவிற்கு டி.கே.சி. அளித்த சான்றுரையானது சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றிலேயே ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சான்று மொழியாக விளங்குகிறது.

---

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்

## இராம. வீரப்பன்

இன்று நம்மிடையே பண்பாடு என்ற சொல் நன்றாக வழங்கி வருகிறது. 45 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தச் சொல்லை முதன்முதலில் ஆக்கித் தந்தவர் டி.கே.சி. அவர்கள்தான். அதுவரை 'கல்ச்சர்' என்ற ஆங்கிலச் சொல்லுக்குக் கலாச்சாரம் என்றும், கலாசாரம் என்றும் கூறிவந்தார்கள். அந்தச் சொல்களுக்குப் பதிலாகப் 'பண்பாடு' என்ற சொல்லை முதன்முதலாக வழங்கிய டி.கே.சி. அந்தப் பண்பாட்டைத் தமது வாழ்விலும் கடைப்பிடித்து வந்தார்.

அவருடைய வீடு அடையா நெடுங்கதவும் அன்பான வரவேற்பும், இரவும் பகலும் விருந்துமாகவே திகழ்ந்தது. அங்கே, இலக்கிய விருந்தோடு கூட அறுசுவை உண்டியும் வலம் வந்த வண்ணமாகவே இருக்கும்.

இயல், இசை, நாடகத் துறையில் அவருடைய ஆதரவில் முன்னேறியவர்கள் ஏராளம். பழந்தமிழ் இலக்கியம் தவிர, நாட்டுப் பாடல்கள், வில்லுப்பாட்டு போன்ற நாட்டுப்புறக் கலைகள், கிராம நாடகங்கள் ஆகிய பல்துறையிலும் அவருடைய ஆதரவினால் பல கலைஞர்கள் வளர்ந்து வந்துள்ளதை நாடு நன்கு அறியும். ஆங்கிலத்திற்கு அடிமையாக இருந்த பலரை, தமிழ்த் தொண்டர்களாக மாற்றிய பெருமையும் டி.கே.சிக்கு உண்டு.

ஒரு சமயம் மூதறிஞர் ராஜாஜி அவர்கள், ''என்னைப் போன்ற ஒருவனையும் கூட தமிழார்வம் கொள்ளச் செய்தவர் டி.கே.சி. தான்; இதைப் பலர் அறியச் சொல்கிறேன். உபசாரம் அல்ல உண்மை'' என்று ஒரு கட்டுரையிலே எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது.

''டி.கே.சி. என்று ஒருவன் இருந்தான்- தமிழ், உலகத்திலேயே சிறந்த பாஷை... தமிழ்க்கவியைப் போல உயர்ந்த கவி உலகிலே இல்லை என்று சொல்லிக் கொண்டே இருந்தான்' என்பதை நீங்கள் எடுத்துச் சொல்லிவர வேண்டும். அப்படிச் செய்து வந்தீர்களானால் 500 ஆண்டுகளுக்குப் பிறகு உலகம் இதை ஒப்புக் கொள்ளும்''-என்று, தான் மறையும் முன்பு சமீபத்தில் நம்மை விட்டுப் பிரிந்த நீதிபதி மகராஜன் அவர்களிடம் கடைசி வேண்டுகோளாக ரசிகமணி டி.கே.சி. அவர்கள் விடுத்தார்கள் என்ற செய்தியைக் கேட்கும்போது தமிழுக்காகவே வாழ்ந்த தனிப்பெரும் தலைவர்களில் ஒருவராக டி.கே.சி. அவர்கள் விளங்கியதை நாம் உணரமுடியும்.

மகாகவி பாரதியும் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம். யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் ...பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை ''என்றுதான் முழக்கமிட்டான்.

ஒரே காலத்தில் வாழ்ந்த மகாகவி பாரதியின் குரலையே கவிமணி டி.கே.சி.யும் ஒலிக்கிறார் என்பதை அறியும்போது, தமிழைக் காக்கும் போராட்டம் நூறாண்டுக்காலமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் உணருகிறோம்.

ஆம்! ஆங்கிலேயர்கள் ஆட்சியில் ஆங்கிலம் மரியாதைக்குரிய மொழியாக, ஆட்சி மொழியாக, ஆதிக்க மொழியாக விளங்கிய போது ரசிகமணி டி.கே.சி. போன்றவர்கள் ''தமிழ்'' ''தமிழ்'' என்று முழங்கி நமக்கு வழிகாட்டி விட்டுச் சென்றுள்ளார்கள். அதனால்தான்:

என்னருமை நண்பா, 'இனியகலை ரசிகா
தென்னர் தமிழ் வளர்க்கும் தேசிகா,
நன்னயச்
சீலயம் சிறந்த சிதம்பரநாத வள்ளால்
சால நீ வாழ்க, தழைத்து'....என்று

கவிமணி தேசிக விநாயகனார் ரசிகமணியை வாழ்த்துகின்றார்.

நம்முடைய வாழ்நாளில் யாரும் ரசிகமணி என்று அழைக்கப்பட்டதில்லை. உயர்ந்த சிந்தனையாளன், நிறைந்த அறிஞன். தேர்ந்த விஞ்ஞானி, சிறந்த கலைஞன், பெரும்புலவன் யாராக இருந்தாலும் அவன் ஒரு ரசிகனாக இருந்தாக வேண்டும். ரசிக்கத் தெரிந்தவன் தான் சிறந்த மனிதனாக மதிக்கப்படுவான். ரசனை இல்லாதவன் மரமாகவே எண்ணப்படுவானே தவிர, மனிதனாகக் கருதப்படமாட்டான். 'என்ன, கல்லைப்போல இருக்கிறானே' என்று சாதாரணமாக நடைமுறை வழக்கில் சிலரைச் சுட்டிக்காட்டுவதே அந்த அடிப்படையில்தான்.....

அதனால்தான் மனிதனுக்கு ரசிக்கத் தெரியவேண்டும்! அதை ஒரு அற்புதக் கலையாக வளர்த்தவர் ரசிகமணி டி.கே.சி. அந்த ஆற்றல்தான், ஆற்றலாளர்கள், அறிஞர்கள், கலைவாணர்கள் பலரையும் அன்புக்குஅடிமைப் படுத்தியது.

இப்படிப்பட்ட மாமனிதரின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசின் சார்பில் கொண்டாடுகிறோம். அவருடைய நூற்றாண்டு விழா நாளில், அவர் கண்ட கனவை நனவாக்குவோம். தமிழைப் போற்றுவோம். தமிழ் உணர்வை வளர்ப்போம். தமிழ்ப் பண்பாட்டைக் காப்போம்.

ரசிகமணி டி.கே.சி.யின் புகழ் வளர்க வாழ்க என்று வணங்குவோம்.!

**மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் ரசிகமணி டி.கே.சி. அவர்கள் பற்றி, சென்னை தொலைக்காட்சியில் 29.9.82 அன்று ஆற்றிய சிறப்புரை**

## அறிவு பெறுவதற்குப் பொருட்காட்சி தேவை

''அரிச்சந்திரன் நாடகத்தை எத்தனையோ பேர் படித்திருக்கிறார்கள். எத்தனையோ பேர் பார்த்திருக்கிறார்கள். அதைச் சாதாரண சிறுவனாக இருந்த மோகனதாஸ் கரம் சந்த் காந்தி பார்த்தார். அவர் மனத்தில் அந்தக் கதை பசுமரத்தாணி போல் பதிந்தது. அதனால் அவர் மகாத்மா ஆனார்.

''பார்த்தால் தான் பயன் உண்டு என்பதை உலகம் உணர்ந்து வருகிறது. உலகம் முழுவதும் 2 ஆயிரத்துக்குமேற்பட்ட பொருட்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. டிரேட் பேர் அத்தாரிட்டி (trade fair authority) என்று ஒருவாரியம் டெல்லியில் இருக்கிறது. அயல் நாட்டவருடன் எப்படி வியாபாரம் செய்வது என்பதை எல்லாம் அது கற்றுத் தருகிறது. ஆண்டு முழுவதும் பணி செய்கிறது. அதுபோன்று சில மாநிலங்களும் ஆண்டு முழுவதும் பணிசெய்து வருகின்றன. தமிழ் நாடும் அப்படித்தான் பணியாற்றி வருகிறது.

''பொருட்காட்சி லாபத்திற்காக மட்டுமல்ல- நேரத்தை வீணாக்காமல் நல்வழியில் பொழுது போக்குவதற்கும் பயன்படும்; அங்கு படிக்கலாம்-அங்கு சென்றால் நிம்மதியாக இருக்கலாம்-அறிவாளியாகலாம் என்ற காரணங்களுக்காகவும் பொருட்காட்சிகள் தேவை''

**சேலத்தில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சி நிறைவு விழாவில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன், இ.ஆ.ப.**




# தமிழகக் கோயிலுக்கு அமெரிக்க வண்ணம்!



**த**மிழ்நாட்டிலுள்ள ஒரு கோயிலுக்கு அமெரிக்க நாட்டிலிருந்து வண்ணக் கலவைகள் வருகின்றன.

அது எந்தக் கோயில்?

அதுதான் சிதம்பரம் நடராஜர் திருக்கோயில்!

ஹவாய் தீவில் சைவ சித்தாந்த திருச்சங்கத்தை நிறுவிய சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலின் மேற்கு கோபுரம் முழுவதற்கும் வண்ணம் பூசுவதற்காக அனுப்பிய 100 சதவிகிதம் ஆக்ரிலிக் கலந்த 1134 கிலோ எடையுள்ள வண்ணக் கலவைகளை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இது தொடர்பாக, சென்னை துறைமுகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில், சைவ சித்தாந்த திருச்சபையின் தென்னிந்தியப் பிரதிநிதி திரு என்.கே. மூர்த்தி, இந்த 18 வகையான வண்ணங்கள் கொண்ட கலவைகளை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த சிவாய சுப்பிரமணியம் சுவாமிகள் இலங்கை வந்திருந்தபோது, சைவ சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்டு 1957ஆம் ஆண்டு சைவ சித்தாந்த திருச்சங்கத்தை அமெரிக்க ஐக்கிய நாட்டு ஹவாய் தீவில் கபா என்ற இடத்தில் நிறுவினார்.

1981ஆம் ஆண்டு சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு, சுப்பிரமணிய சுவாமிகள் வருகை தந்த போது ஆலயப் பு[illegible]மைப்புப் பணிகளைக் கண்டார். ஆலய கோபுரச் சிற்பங்களுக்குப் பயன்படுத்தப்படும் வண்ணங்கள் நீண்ட காலம் நீடித்திருக்கும் தன்மையற்றதாகவும், பருவ நிலைகட்கு ஈடுகொடுக்க இயலாததாகவும், சுண்ணாம்பு சுதை வேலைகள் கொண்ட பதுமைகளை அழகிய வண்ணங்களுடன் அதிக காலத்திற்குப் பாதுகாக்கும் திறனற்றவையாகவும் இருப்பதை அறிந்தார்.



சுப்பிரமணியசுவாமி அமெரிக்கா திரும்பிச் சென்று கலிபோர்னியா ஒக்லேண்டில் உள்ள பிராஸ் ஸ்டபிள்பூ .டுன் கம்பெனியாரிடம் சிதம்பரம் கோவில் சுதை வேலை கொண்ட மாதிரியைக் காண்பித்தார். இதையடுத்து சீரிய ஆராய்ச்சிக்குப் பின் 100 சதவிகிதம் ஆக்ரிலிக் கலந்துள்ள சீதோஷ்ணம் மற்றும் இரசாயன மாற்றங்களினால் ஏற்படும் மாற்றங்களிலிருந்து பாதுகாக்கக் கூடிய வண்ணத்தை அந்தக் கம்பெனி தயாரித்தது.

சைவ சித்தாந்த திருச்சங்கத்திற்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:—

''நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடிய வகையிலே அவர்கள் பல்வேறு வண்ணங்களை நமக்கு அனுப்பி இருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த அக்கறையுடன் வண்ணக் கலவைகளைத் தயாரித்து அனுப்பி வைக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு இந்தியா மீது— தமிழ்நாட்டின் மீது— சைவ சித்தாந்தத்தின் மீது எவ்வளவு பற்று இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.''

இந்த விழா, நம் நெஞ்சங்களை வெகுவாகக் கவர்ந்தது என்றால் அது மிகையல்ல!

— பி.வி.ஜி.

# படமும் செய்தியும்



அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழாவை (2.10.82) யொட்டி கிண்டி காந்தி மண்டபத்தில் நடைபெற்ற பொருட்காட்சியை மேதகு ஆளுநர் திரு எஸ். எல் குரானா அவர்கள் திறந்து வைத்து, ஏழை எளியவர்களுக்கு தையல் இயந்திரங் களையும் தொழிற் கருவிகளையும் வழங்கினார். மாண்புமிகு கதர், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். என். இராஜேந்திரன் அவர்கள் உடன் உள்ளார்.



மதுரையில் பெரியார் நூற்றாண்டு நினைவுத்தூணை 2-10-82ல் மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் டாக்டர்திரு கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்.



டெல்லியில் உள்ள மாநில பண்ணைக் கழகத்தின் தலைவர் திரு ராமச்சந்திர விக்கேல் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர் களை, அவரது இல்லத்தில் 6.10.82ல் சந்தித்தார்.



சேலத்தில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சியில் பங்குபெற்ற வியாபாரிகள், முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்குக் கட்டடம் கட்டுவதற்காக, 40 ஆயிரம் ரூபாய் தருவதாக வாக் களித்து-முதல் தவணையாக வழங்கிய ரூ. 26,415ஐ மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களிடம் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன், இ.ஆ.ப. அவர்கள் அளிக்கிறார்கள். செய்தி சுற்றுலா (தமிழ்) பண்பாட்டுத்துறையின் செயலர் மற்றும் ஆணையர் திரு ப.பா. கிருஷ்ணசாமி, இ.ஆ.ப. அவர்கள் உடன் உள்ளார்.



மாண்புமிகு மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை அவரது இல்லத்தில் 6.10.82ல் சந்தித்தார்.



சென்னை கே. கே. நகரில் உள்ள அரசினர் மருத்துவமனையில் அவசரச் சிகிச்சைப் பிரிவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் 8-10-82ல் திறந்து வைத்தார்.


வி.ஐ.பி.யின்
அழிச்சுவட்டை பின்பற்றுங்கள்.
வி.ஐ.பி.
ரூ. 25.50
ரூ. 30.00
ரூ. 31.50
எல்லா
காதிகிராப்ட் களிலும்
கிடைக்கும்
வி.ஐ.பி. காலணிகள்
விலையோ மலிவு
தேய்வோ குறைவு
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
''குறளகம்'', சென்னை-600 001.

# விரைந்து செயலாற்றும்

# வீட்டுவசதி வாரியம்!



## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர்

## திரு. வேலூர் நாராயணன் அவர்களின் பேட்டி

**ம**னிதனின் மிக இன்றியமையாத தேவைகளுள் உணவுக்கு அடுத்தபடியாக இருப்பது உறையுளாகும். ஆம். வீட்டுப் பிரச்சனை இன்றைய சூழ்நிலையில் பெரும் பிரச்சனையாக உள்ளது. அதனைத் தீர்த்து வைக்கும் வகையிலே, தமிழக அரசு பல திட்டங்களைத் தீட்டிச் செவ்வனே பணியாற்றி வருகின்றது.

குடிசைகள் கோபுரங்களாகின்றன; தரிசு நிலங்கள் திருத்தப்பட்டுக் குடியிருப்புகளாக—அழகிய வீடுகளாக விளங்குகின்றன. குறிப்பாக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையிலே, சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது. அதன் பணிகளை விளக்கிக் கூறுகிறார், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு வேலூர் நாராயணன் அவர்கள்.

பேட்டி : ஆனந்தன்

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நோக்கங்கள் என்னென்ன?**

**உ**ணவு, உடைக்குப் பிறகு வீட்டுவசதி, மக்களின் முக்கிய அடிப்படைத் தேவையாக உள்ளது. இக்கருத்தினை மேற்கொண்டு வீடற்ற பலதரப்பட்ட வகுப்பினருக்குக் குறைந்த விலையில் (அடிப்படை வசதிகளுடன் கூடிய) குடியிருப்புகளைக் கட்டிக் கொடுப்பதே தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் முக்கிய நோக்கமாகும்.

**தமிழ்நாட்டில் இதுவரை எத்தனை வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இதுவரை 76,335 வீடுகளைக் கட்டித் தந்துள்ளது. இவற்றில் வருவாயில் பின்தங்கியோருக்கு 30,664 வீடுகளும், தொழிலாளர்களுக்கு 2,854 வீடுகளும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 17,726 வீடுகளும், நடுத்தர மற்றும் உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கு 10,257 வீடுகளும், தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கு 12,600 வாடகை வீடுகளும், மற்றும் காவல் துறையினருக்கு 2,214 வீடுகளும் கட்டித் தரப்பட்டுள்ளன.

**வீடுகள் எந்த அடிப்படையில் தரப்படுகின்றன?**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் பலதரப்பட்ட அடுக்கு வீடு



தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னை அருகிலுள்ள 'பாடி' ஏரியிலும், செங்கல்பட்டு மாவட்டம் கூடலூரிலும் ''வட்ட வடிவு வீடுகள்'' கட்டியுள்ளது. ஒவ்வொரு வட்டத்திலும் 16 வீடுகள் இருக்கும்.

களுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, குலுக்கல் முறை மூலம் தவணை முறைத் திட்டத்தின் கீழ், வருமான அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அவை:

பொருளாதாரத்தில் பின் தங்கியோருக்கு ரூ. 4,200-க்கு மேற்படாமல்; குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 4,200 முதல் ரூ. 7,200 வரையிலும்; நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 7,200 முதல் ரூ. 18,000 வரையிலும், உயர்வருமானம் உள்ளவர்களுக்கு அதாவது ரூ. 18,000-க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு வீடுகள் தரப்படுகின்றன.

**தமிழ்நாட்டில் சொந்தக் குடியிருப்புகள் (Flats) எத்தனை? வாடகைக் குடியிருப்புகள் (Rental) எத்தனை உள்ளன?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இதுவரை 76,335 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. அவற்றில் 43,119 சொந்தக் குடியிருப்புகளும், 33,216 வாடகைக் குடியிருப்புகளுமாகும்.

**சென்னை நகரில் காலி வீட்டு மனைகள் (Plot) உள்ளனவா? அவை எந்த அடிப்படையில் தரப்படுகின்றன?**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை நகரில் பல புறநகர்த் திட்டங்களை அமைத்து, அவற்றில் மேம்படுத்தப்பட்ட மனைகளைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்த பின்பு ஒதுக்கீடு செய்கின்றது.

ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளில் சில ஒதுக்கீடுதாரர்களால் முன்பணம் செலுத்த இயலாமையால் வாரியத்திடமே திருப்பி ஒப்படைக்கப்படுகின்றன. இந்த மனைகளின் பட்டியல் அரசிற்கு அனுப்பப்பட்டு அரசு அவற்றை மறு ஒதுக்கீடு செய்கின்றது.

மேலும், சில ஒதுக்கீடுதாரர்கள் மாதாந்திரத் தவணையினைச் சரிவர செலுத்தாமையினால், ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டு இம்மனைகள் மீண்டும் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டு, குலுக்கல் முறையிலோ அல்லது அதிகத் தொகை செலுத்துபவருக்கோ ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

**புதிதாக ஏதேனும் நகர், சென்னை அல்லது பிற மாவட்டங்களில் தமிழ்நாட்டில் எங்கே யாவது உருவாக்கப்படுகின்றனவா?**

சென்னைப் பெருநகர் பகுதியில் சுமார் 7,800 ஏக்கர் நிலப்பரப்பில் திருவான்மியூர், ராமாபுரம், நெற்குன்றம், அம்பத்தூர் மற்றும் தாம்பரம் ஆகிய இடங்களில் புறநகர்த் திட்டங்களைச் செயல்படுத்தும் திட்டம் வாரியத்திடம் உள்ளது. மேலும், திருச்சியில் நாவல்பட்டு என்ற இடத்திலும், தஞ்சை மாவட்டத்தில் தஞ்சைப் புறநகரும், மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல் புறநகர்த் திட்டமும், மதுரையில் எல்லிஸ் நகர் திட்டமும், கோவையில் சௌரிபாளையம், உப்பிளிப்பாளையம் மற்றும் குறிச்சித் திட்டமும் வாரியத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேலும் கோவை, சேலம், நீலகிரி, மதுரை ஆகிய மாவட்டங்களில் புதிய புறநகர்ப் பகுதிகளை அமைக்க வாரியம் நிலம் கையகப்படுத்தும் வேலைகளை மேற்கொண்டுள்ளது.

**வீட்டுப் பிரச்சினைகள் தீர வேறு என்னென்ன திட்டங்கள் உள்ளன?**

வீட்டுப் பற்றாக்குறைக்குத் தீர்வு காண

வாரியம் சென்னை மற்றும் பல்வேறு மாவட்டங்களில் சுமார் 17,000 ஏக்கர் நிலப்பரப்பினைக் கையகம் செய்து, பலதரப்பட்ட வகுப்பினருக்குப் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை, உலக வங்கி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம், மற்றும் தமிழக அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. குறிப்பாக, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு வாரியம் செயல்படுத்தும் திட்டங்களில் அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. இன்றைய நிதி நிலையில் வாரியம் ஆண்டு ஒன்றிற்குச் சுமார் 15,000 குடியிருப்புகளைத் தான் அமைத்துக் கொடுக்க முடிகின்றது. மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே போவதனால் வீட்டுப் பற்றாக்குறைக்கு உடனடியாகத் தீர்வு காண இயலவில்லை.

**வாரியம் கட்டும் வீடுகள் அவ்வளவு தரம் இல்லை என்று கூறப்படுகிறதே? தங்கள் விளக்கம் என்ன?**

தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியத்தால் கட்டித் தரப்படும் வீடுகள் தரம் குறைந்தவை என்று கூறப்பட்டால், அது உண்மைக்குப் புறம்பானது. ஏனெனில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அதன் கைதேர்ந்த பொறியாளர்களைக் கொண்டும், தரமான கட்டடப் பொருட்களை உபயோகித்தும், மண் தரத்திற்கேற்ப அடிக்கல் அமைத்தும், நல்ல முறையில் மேற்பார்வை செய்தும் தரமான வீடுகளைக் கட்டி வருகின்றது.

தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு வீடு ஒன்றிற்குச் சுமார் 50 முதல் 100 விண்ணப்பங்கள் வருகின்றன. இதன் மூலம் வாரியத்தினால் கட்டப்படும் வீடுகளின் தரமும் மக்களின் தேவையும் வெளிப்படையாகத் தெரிகின்றன.

**அடுக்கு மாடி வீடுகள் (Flats) எங்ஙனம் விண்ணப்பதாரருக்கு ஒதுக்கப்படுகின்றன?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் அடுக்குமாடி வீடுகள் அனைத்தும் குலுக்கல் முறையிலேயே விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இம்முறையில் ஒதுக்கீடு கிடைத்த விண்ணப்பதாரருக்கு அப்பொழுதே குலுக்கல் முறையிலேயே அடுக்குமாடி வீட்டின் எண்ணும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**த**மிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் புதிய 20 அம்சத் திட்டத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கியோர்க்காகவும், குடிசைவாழ் மக்களுக்காகவும், சுமார் 3395 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதி இனத்தவர்களுக்காகச் சுமார் 1524 வீடுகள் ஒதுக்கப்பட்டன. நடப்பு ஆண்டான 82-83-ல் சுமார் 5,000 வீடுகள் கட்டவும், சுமார் 3,000 வீட்டுமனைகளை மேம்படுத்தத் திட்டமிட்டு, திட்டம் செயல்பட்டு வருகிறது. இதில் பொருளாதாரத்தில் பின்தங்கியோர்க்காக 2,065 வீடுகளும் குடிசைவாழ் மக்களுக்காக 2,935 வீடுகளும், சென்னையில் மனை மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3000 மனைகள் உள்ளன. இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலை சாதியினர்களுக்காக 500 வீடுகளும், 600 மனைகளும் ஒதுக்கப்படும்.

**பத்திரிகையாளருக்குச் சொந்தமாகும் வகையில் தனி வீடுகள் அல்லது அடுக்கு மாடி வீடுகள் சலுகை விலையில் ஒதுக்கப்படுமா?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் தனி வீடுகள் மற்றும் அடுக்குமாடி வீடுகளில் 3 சதவீதம் பத்திரிகையாளருக்கு ஒதுக்கப்படுகின்றன. இந்த வீடுகள் பத்திரிகையாளர்களுக்குப் பொதுமக்களுக்கு ஒதுக்கப்படும் விலைக்கே ஒதுக்கப்படுகின்றன.

**வாரியக் குடியிருப்புகளில் என்னென்ன வசதிகள் உள்ளன?**

வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகளில் வரவேற்பு அறை, படுக்கை அறை, சமையல் அறை, குளியலறை மற்றும் கழிவு அறை வசதிகள் உள்ளன. மேலும், குடியிருப்புகள் அமைந்த பகுதிகளில் சாலை வசதி, தெரு விளக்கு வசதிகள், குடிநீர் மற்றும் வடிகால் வசதிகள், கழிவு நீர் வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்வது மட்டுமல்லாமல், சாலை இரு ஓரங்களிலும் மரங்கள் நடுதல், குப்பைத் தொட்டிகள் ஆங்காங்கே அமைத்தல் போன்ற வசதிகளும்

சென்னை வில்லிவாக்கத்தில் குறைந்த வருமான முள்ளவர்களுக்கு வீட்டுவசதி வாரியம் கட்டியுள்ள வீடுகள்.





பெரியார் மாவட்டத்தில் வீட்டுவசதி வாரியம் கட்டி யுள்ள அடுக்கு மாடி வீடுகள்.

செய்து கொடுக்கப்படுகின்றன. மேலும், புறநகர்ப்பகுதியில் சமூக நலக்கூடம், விளை யாட்டுத் திடல், பூங்கா வசதிகள், கடைகள் மற்றும் அங்காடிகள் போன்ற வசதிகள் ஏற் படுத்தித் தரப்படுகின்றன. இதைத் தவிர பெட்ரோல் பங்கு, திரையரங்கம், தீயணைப்பு நிலையம், தபால் நிலையம், பள்ளிக்கூடம், மருத்துவ மனைகள் போன்றவற்றிற்கு மனைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

**சில குடியிருப்புகளில் தண்ணீர் வசதி, சாலை வசதி சரிவர இல்லையென்று கூறப்படுகிறதே? வீட்டு வசதி வாரியமும், மாநகராட்சியும், குடிநீர் வடிகால் வாரியமும் ஆக மூன்றும் இணைந்து செயல்படாததால் இந்தச் சிரமங்கள் என்று கூறப்படுகிறதே இது உண்மையா?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால் ஏற்படுத்தப்படும் புறநகரங்களில் குடிநீர் வசதி, வடிகால் வசதி, சாலை வசதி, மின் வசதி போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. புற நகர்ப்பகுதி வளர்ச்சி அடைந்த பின் இந்த அடிப்படை வசதிகளை மேற்கொண்டு பரா மரிப்பதற்காக, மேற்கண்ட துறையினரிடம் ஒப்படைக்கப்படுகிறது. புறநகர்ப்பகுதிகள் மேற்கண்ட துறையினரிடம் ஒப்படைக்கப் படும் வரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமே பராமரித்து வருகிறது.

**தமிழக வீட்டு வசதி வாரியம் போல், பிற மாநிலங் களிலும் செயல்படுகின்றனவா?**

தமிழக வீட்டு வசதி வாரியம் போல் மற்ற மாநிலங்களிலும் வீட்டு வசதி வாரி யங்கள் இயங்கி வருகின்றன. உதாரணமாக, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, குஜராத், ஹரியானா, இராஜஸ்தான், மகாராஷ்டிரா முதலிய மாநிலங்களில் வாரியங்கள் இயங்கி வருகின்றன. மற்ற மாநிலங்களில் உள்ள வாரி யங்களை ஒப்பிடும்பொழுது, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் எல்லோராலும் போற் றப்படும் அளவிற்கு வசதியான, தரமான, குறைந்த விலையில் அதிக வீடுகளைக் கட்டித் தந்துள்ளது. வீட்டு வசதி வாரியங்களுக்குப் பெருவாரியான நிதி உதவி அளிக்கும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தி னிடமிருந்து (HUDCO) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தொடர்ந்து அதிக நிதி உதவி பெறுவதில் இந்தியாவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

**ஒரே வீட்டில் பல குடும்பங்கள் குடியிருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட வாடகைக் குடி யிருப்பில் முறையாக ஒதுக்கீடு செய்யப்பட்ட வர், அவ்வீட்டின் ஒரு பகுதியைத் தானும் உபயோகித்து, மற்றொரு பகுதியை அன்னிய ருக்கு வாடகைக்கு விடுவது வாரிய விதி களுக்குப் புறம்பானது. இத்தகைய முறை கேடுகள் வாரியத்தின் கவனத்திற்கு வந்தால் வாரியம் உடனடியாக அந்த ஒதுக்கீட்டினை ரத்து செய்யும். மேற்கண்ட ஒழுங்கீனம் ஏற் படாமல் இருப்பதற்காக வாரியத்தின் உதவி வருவாய் அதிகாரிகள் கண்காணித்து வரு கிறார்கள்.

**புதிய திட்டங்களைப் பற்றி ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தமிழ்



# பொம்மையோ பொம்மை!

பொம்மை என்றால் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் பிடிக்கும்.

அழகிய வண்ண பொம்மைகளை அவ்வப்போது வாங்கி வந்து, வீட்டை அலங்கரிக்கிறோம் அல்லவா?

அதற்கு ஒரு நல்ல வாய்ப்பு அண்மையில் கிட்டியது. சென்னை, அண்ணாசாலையிலுள்ள, காதி கிராமோத்யோக் பவனில் பொம்மைக் கொலு நடந்தது.

செப்டம்பர் திங்கள் 3-ஆம் தேதி நடந்த இந்தப் பொம்மைக் கொலுவை, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு கைவண்ணப் பொருள் வளர்ச்சிக் கழக இயக்குநர் புலவர் இந்திரகுமாரி அவர்கள் துவக்கி வைத்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இந்தக் கொலுவில், கண்ணைக் கவரும் வண்ண பொம்மைகள் கருத்துக்கும் விருந்தூட்டுவனவாக அமைந்திருந்தன. 10 காசிலிருந்து ரூ. 700 வரை விலையுள்ள பொம்மைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாண்டு, சிறப்பு வகையாகக் கீழ்க்காணும் பொம்மை வகைகள் கொலுவில் இடம் பெற்றிருந்தன:

1. வைஷ்ணவி, 2. கரடி வித்தை, 3. மீனாட்சிக் கல்யாணம், 4. வள்ளித் திருமணம், 5. பிட்டுக்கு மண் சுமந்தது.

பொதுவாக மண், காகிதப் பொம்மைகள் தமிழ்நாட்டில் சென்னை, காஞ்சிபுரம், பண்ருட்டி, வேலூர், கடலூர் ஆகிய இடங்களிலிருந்து தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 12 ஆண்டுகளாக நடத்தப்பட்டுவரும் இந்தப் பொம்மைக் கொலுவிலுள்ள பொம்மைகள்-மேலை நாட்டினரை வெகுவாகக் கவர்வது மட்டுமல்லாமல், அவர்கள் விரும்பி வாங்கும் வகையிலும் கைவண்ணம் பொருந்தியதாகும்.

இந்தப் பொம்மைகள் தயாரிப்பு மூலம், தமிழகத்தில் 600 கைவினைக் கலைஞர்கள் பயன் பெறுகிறார்கள். கடந்த ஆண்டு ரூ. 1.35 இலட்சத்திற்குப் பொம்மைகள் விற்பனையாகின.

பொம்மைக் கொலுவின் போது மட்டுமல்ல, ஆண்டு முழுவதும் இந்தப் பவனில் பவனி வந்து, பொம்மைகளைப் பார்க்கலாம்; வாங்கவும் செய்யலாம்.

—பி. வி. ஜி.

நாடு முழுவதிலும் சுமார் 16,000 ஏக்கர் நிலப்பரப்பினைக் கையகம் செய்து திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது இதைத் தவிர மாநிலம் முழுவதற்கும் ஒரு ஆண்டுத் திட்டமும் மற்றும் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குத் தனியாக ஒரு 5 ஆண்டுத் திட்டமும் தீட்டப்பட்டு வாரியத்தின் பரிசிலனையில் உள்ளன.

**புறநகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளை மாநகராட்சியிடம் ஒப்படைக்கத் தாமதம் ஏற்படுவதால் பொது மக்களுக்குத் துன்பம் ஏற்படுவதாகக் கூறப்படுவது உண்மையா?**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகள் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படுவதில்லை. ஆனால் வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகள் அடங்கிய பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள குடிநீர் வசதி, வடிகால் வசதி, சாலை வசதி, மின் வசதி போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகளை மேற்கொண்டு பராமரிப்பதற்காகச் சம்பந்தப்பட்ட துறையினரிடம் அவை ஒப்படைக்கப்படுகின்றன.

**குடும்பத்துக்கு ஒரு வீடாவது கிடைக்க வழி ஏற்படுமா?**

குடும்பத்துக்கு ஒரு வீடு கட்டிக் கொடுப்பதுதான் இந்த அரசின் இலட்சியம். அந்த இலட்சியத்தை நிறைவேற்றி வைப்பதுதான் வீட்டுவசதி வாரியத்தின் கடமை.

இந்தக் கடமையை இன்றைய நிதி நிலைக்கு ஏற்ப எவ்வளவு வேகமாகச் செயலாக்க முடியுமோ அந்த அளவுக்குச் செயல்படுத்தி வருகிறோம்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் கீழ்க்கண்ட சதவீதத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன:

| | |
|---|---|
| 1. தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதியினருக்கு | 10% |
| 2. மாநில அரசு ஊழியர்களுக்கு | 18½% |
| 3. மத்திய அரசு ஊழியர்களுக்கு | 11% |
| 4. ராணுவ சிப்பந்திகளுக்கு | 7½% |
| 5. சலவையாளர் மற்றும் (சவரத் தொழிலாளர்களுக்கு) | 5% |
| 6. பொதுமக்களுக்கு | 45% |
| 7. பத்திரிகையாளர்களுக்கு | 3% |
| மொத்தம் | 100% |

# ஜீவானந்தத்தின் இலக்கியப் பணி





பி. இ. பாலகிருஷ்ணன்

ஆங்கில ஏகாதிபத்தியம் நமது நாட்டை அடிமைப்படுத்தியபோது அதை எதிர்த்து, வீரமிக்க சுதந்தரப் போராட்டத்தில் பங்கேற்ற பெரும் தலைவர்களில் ஒருவர் ப. ஜீவானந்தம். தமிழ்நாட்டின் பெருமையைக் காத்த பெருமகனார்களில் இவரும் ஒருவர்.

'ஜீவா' என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டவர் ஜீவானந்தம்.

ஜீவா, குமரி மாவட்டத்தில் பூதப் பாண்டியில் 1907-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ஆம் நாளில் பட்டன் பிள்ளைக்கும் திருமதி உமையம்மைக்கும் பிறந்தவர். இவருக்கு முன்பு மூன்று குழந்தைகள் பிறந்து இறந்து விட்டதனால், நான்காவது குழந்தையான ஜீவாவுக்குத் தம் பெற்றோர்கள் இட்ட பெயர் மூக்காண்டி. மூக்குக்குத்தி, மூக்காண்டி எனப் பெயர் வைத்தனர் பெற்றோர்கள்.

இவ்வாறு பிறந்த மூக்காண்டி தம் குடும்பத்தாரின் பூர்வீகத் தெய்வமான சொரிமுத்தையன் என்ற தெய்வத்தின் பெயரையும் தாங்கியதுண்டு; ஜீவா சிறிது காலம் சொரிமுத்து என்று அழைக்கப்பட்டார். பின்னர், ஜீவா, சிராவயலில் காந்தி ஆசிரமத்தை அமைத்து நடத்தி வந்தபோது ஜீவானந்தமாகப் பெயர் மருவியது. பின்னர், மறைமலையடிகள் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கம் ஜீவாவையும் ஈர்த்தது. ஆனால் ஜீவானந்தம் என்ற பெயரை ஜீவா என்றால் உயிர்; ஆனந்தம் என்றால் இன்பம் என்று தனித் தமிழாக்கம் செய்து உயிர் இன்பன் என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார்.

இவ்வாறு முழுமூச்சாகத் தனித்தமிழ் வெறியோடிருந்த ஜீவா, அக்காலத்தில் பிரபல எழுத்தாளராக இருந்த வ. ரா. அவர்களின் நட்பினாலும் அவருடன் செய்த கலந்துரையாடல்களினாலும் கருத்துமாற்றமடைந்து தனித்தமிழ் ஆர்வத்தை விட்டு, நடைமுறைத் தமிழில் பேசவும், எழுதவும் முனைந்தார்.

பின்னர், தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்ட ஜீவா, சங்கத் தமிழ் நூல்களிலிருந்து பாரதி படைப்புகள் வரை ஆராய்ந்து புதிய பார்வையில் தம் கருத்துக்களை வெளியிட்டு வந்தார். பாரதி வழியில் தாமே பாடல்களை இயற்றத் தொடங்கினார்.

பின்னர், ஜீவாவுக்கு ஏற்பட்ட ஈ.வெ.ரா பெரியாரின் தொடர்பு, சுயமரியாதை இயக்கத்தின் மீதும், ம. சிங்காரவேலு செட்டியாரின் தொடர்பு பொதுவுடமைக் கொள்கையின் மீதும் ஈர்க்கப்பட்டது.

தொழிற்சங்கத் தந்தையான வி. சக்கரைச் செட்டியார், தமிழ்த் தென்றல் திரு. வி. க. ஆகியோரின் தொடர்பு ஜீவாவுக்கு மிகுந்த பயனளித்தது.

விஞ்ஞான சோஷலிசத்தின் முதல் நூல் 'பொதுவுடைமை அறிக்கை' என்கிற கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் ஏஞ்செல்ஸ் ஆகியோரால் எழுதப்பெற்ற புகழ்பெற்ற நூலாகும். இந் நூலின் இறுதியில் காணப்படும் இரண்டு மூன்று வாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு பின் வரும் கவிதையை ஜீவா இயற்றுகிறார்.

'புலமைசெறி ஆதிக்க வகுப்பா ரெல்லாம்
பொதுவுடைமைப் புரட்சியினால் நடுங்கி
வீழ்வார்
அலக்கழியத் தொழிலாளரைப் பிணைத்த
அடிமையெனும் சங்கிலிகள் அறுந்து
போகும்
பலவிதமாய் நலம்தருமோர் புதிய லோகம்
பாட்டாளி மக்களவர் பாங்காய்ச் சேரும்
உலகத்தில் எத்தேசத் தும்வாழ் கின்ற
உழைப்பாளித்தோழர்களே ஒன்றுசேர்வீர்'

ஜீவானந்தம் ஓர் அரசியல் தலைவர் என்றும், தமிழறிஞர் என்றும், பாரதியின் புகழ் பரப்பிய பித்தன் என்றும் தேசபக்தன் என்றும் தான் பலர் அறிந்திருக்கிறார்கள். அவர் ஒரு கவிஞர் என்பதைச் சிலர் மட்டுமே அறிவார்கள்.

அறிஞர் வெ. சாமிநாத சர்மா அவரைப் பற்றிக் கூறுகிறார்.

''நமது நாட்டில் விடுதலைப் போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, திரு ஜீவானந்தம் அவர்கள் உள்ளத்தில் பொங்கியெழுந்த உணர்ச்சிகள், கவிதைகளாக உருக்கொண்டு பல மேடைகளில் ஒலி செய்தன. பலருடைய உள்ளத்தை அசைத்துக் கொடுத்தன. இவரது பாடல்களைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் எந்த உள்ளத்திலிருந்து இவை எழுந்தனவோ, அந்த உள்ளத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அந்த உள்ளம், தியாகத் தீயில் புடமிடப் பெற்றுத் தூய்மையடைந்தது. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது, பலர் நலத்தில் தன்னலம் காணும் தன்மையது. இத்தகைய உள்ளப் பாங்குகள் நாட்டிலே வளர வேண்டும்.''

இவ்வாறு வெ. சாமிநாத சர்மா ஜீவாவின் தியாக உள்ளத்தையும் கவித் திறனையும் பாராட்டினார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்ட மக்களும் சமதர்ம உணர்வு பெற்ற உழைப்பாளர்களும் விழிப்புப் பெற்று வந்த காலம். பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் போன்ற வீரர்கள் தூக்கிலிடப்பட்டு, நாடு கொந்தளித்துக் கொண்டிருந்த காலம். பல வீரர்கள் சாவுக்குத் துணிந்து சுதந்தரப் போரில் பங்கேற்று வந்த காலம், அக்காலத்தில் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தேசபக்தர்களுக்குக் கொள்கையில் எத்துணை உறுதியிருக்க வேண்டும் என்பதனை ஜீவா சிந்திக்கிறார். அவ்வீரர்களுக்கு மேலும் வீர உரம் ஊட்டுகிறார் ஜீவா இப்பாடலில்!



''காதற் கனிரசமே—எந்தன்
கண்மணியே பூங்குயிலே
சாதலும் கற்கண்டடி—சம
தர்மயுத்த வீரன்என்றே (காதற்)

அச்சம் அவநம்பிக்கை—பழி
யார்ந்தசுய நன்மையெல்லாம்
துச்சமாய்த் தள்வோமடி—வீரம்
சூழ்துணிவு கொள்வோமடி (காதற்)

..............................

தூங்கிடோம் பசிபொறுப்போம்-சிறை
துன்பமெதையும் சகிப்போம்
ஏங்கா துழைப்போமடி—பூவில்
இன்பசம தர்மத்திற்கே (காதற்)

''தூக்குமேடை ஏறத்தயார்—சுடும்
துப்பாக்கிமுன் நிற்கத்தயார்—எங்கள்
நோக்கம்நிறை வேறுதற்கே—எந்த
நோன்பு கொண்டிடவும்தயார்
(காதற்)

இவ்வாறு சுதந்தரப் போராட்ட வீரர்களுக்கு உணர்ச்சியை ஊட்டுகிறார் ஜீவா.

ஜீவா பள்ளிப் பருவத்திலேயே பாடல் இயற்றும் ஆற்றல் பெற்றார். ஏழை எளியோர் மீது மிகவும் பாசங்கொண்ட ஜீவா மகாத்மா காந்தி வாசகசாலை அமைத்துக் கிராம சேவைகளிலும் நிவாரண வேலைகளிலும் ஈடுபட்டார்.

நமது நாடு அந்நிய ஆதிக்கத்தின் கீழ், கட்டுண்டு இருந்த காலம். மக்கள் அடிமை வாழ்வை அனுபவித்து வந்த காலம். ஜீவா அடிமை வாழ்வு ஏன் பிறந்தது என்பதனைச் சிந்திக்கிறார். 1935-ல் இப்பாடலை இயற்றுகிறார்.

''நல்லாரை உழைப்போரைப் பறையர்
என்றார்
நயவஞ்ச முடையோர்மேற் சாதியென்றார்
பொல்லாத கொடியவரை மன்னர் என்றார்
பொய்உரைத்த கயவர்தம்மைக் குருக்கள்
என்றார்
சொல்லாரும் தாயினத்தை அடிமை என்றார்
சூதுமிகும் ஆசாரம் சமயம் என்றார்

''இல்லாத பொய்வழியில் சென்றதாலே
இந்நாட்டார் அடிமை வாழ் வெய்தினாரே!''

படிப்பைப் பாதியிலேயே நிறுத்திக் கொண்டார் ஜீவா. வ. வே. சு. ஐயர் சேரன் மாதேவியில் நடத்தி வந்த பரத்வாஜ் ஆசிரமத்தில், அங்கு பிராமண மாணவர்களுக்கு மட்டும் தனி இடத்தில் உணவு பரிமாறப் படும் வழக்கத்தை எதிர்த்து ஈ. வெ. ரா. பெரியார் நடத்திய போராட்டத்தில் ஜீவாவும் கலந்து கொண்டார்.

ஜாதி வெறிக்கு இரையான பரத்வாஜ் ஆசிரமம் மூடப்பட்டது. இந்த ஆசிரமம் மூடு விழாக் கண்ட பிறகு புதிய சமத்துவ ஆசிரமம் ஒன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். உடனே செட்டி நாட்டுக்குச் சென்று, காரைக்குடி அருகில் உள்ள சிராவயல் என்ற கிராமத்தில் காந்தி ஆசிரமம் என்ற பெயரில் புதிய ஆசிரமத்தைத் தோற்றுவித்தார்.

''எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்தியா மக்கள்''

என்று பாரதி கூறியபடி ''உயர்ந்த ஜாதியினரும் தாழ்ந்த ஜாதியினரும்'' சமத்துவமாக இந்த ஆசிரமத்தில் நடத்தப்பட்டனர். ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாகப் பாவிக்கப் பட்டனர்.

தேசீயக் கல்வி போதனைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. சேரிகளில் இரவுப்பள்ளிகளும், நூல் நூற்கும் நிலையங்களும் நிறுவப் பெற்று ஆசிரமவாசிகளால் நடத்தப்பட்டன.

சிறந்த முறையில் ஜீவாவால் நடத்தப் பட்ட இந்த ஆசிரமத்திற்குக் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. வருகை தந்து வாழ்த்திச் சென்றார். அச்சமயம் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் வ. உ. சி. பேசுகையில்,

''அஞ்சுபவர்களும் கெஞ்சுபவர்களும் சுதந்தரத்தைப் பெற முடியாது. ஜீவானந்தம் போன்ற சிலர் இருந்தாலே போதும்'' என்று பாராட்டினார்.

இதேபோல் பிறிதொரு சமயம், 1927-ஆம் ஆண்டில் காந்தி அடிகள் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது காரைக்குடி அருகில் தன் பெயராலேயே ஜீவாவின் தலைமையில் மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்றுக் கொண்டிருந்த சிராவயல் ஆசிரமத்திற்கு வருகை தந்தார்.

அப்போது காந்திக்கும் ஜீவாவுக்கும் இப்படி ஒரு உரையாடல் நிகழ்ந்த செய்தி வரலாற்றில் இடம் பெற்று விட்டது.

''உங்களுக்கு என்ன சொத்து இருக்கிறது?'' என்று ஜீவாவைப் பார்த்துக் காந்திஜி கேட்கிறார்.

அதற்கு ஜீவா பதில் சொல்கிறார்.

''இந்தியா தான் என் சொத்து''

இதைக் கேட்டதும் காந்திஜி உடனே கூறுகிறார். ''இல்லை...இல்லை.....நீங்கள் தான் இந்தியாவின் சொத்து''

இவ்வாறு நமது தேசத் தந்தையின் பாராட்டைப் பெற்ற ஜீவா, பாரதியைத் தன் கவிதைப் படைப்புகளுக்கு ஆசானாக ஏற்றுக் கொண்ட ஜீவா, பெண் விடுதலை பற்றி அற்புதமான பாடல்களை இயற்றினார்.

ஜனநாயக வாழ்வின் செழிப்புக்கு அடித்தளமாக அமைவது மாதர் விடுதலை இயக்கம் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட செய்தி. நாடு சோஷலிச இன்ப வாழ்வு பேண வேண்டுமானால் பெண் விடுதலைை பெற்றாக வேண்டும். இந்த உணர்வினைத் தூண்டும் வகையில் 1936-ல் இப்பாடலை இயற்றினார் ஜீவா.

''உடனடிமை யொழிய வேண்டும்-பெண்கள்
உரிமை யடைய வேண்டும்—
வேறென்ன வேண்டும் (உடனடிமை)

தட்டு முட்டுச் சாமான்போல்
தையலரைப் பாவிக்கும்
முட்டாள்தன மகல வேண்டும்—
வேறென்ன வேண்டும் (உடனடிமை)
சின்னத்தன மாய்ப் பெண்ணை
சித்தரிக்கும் நூற்களை
இன்னே நெருப்பிலிட வேண்டும்—
வேறென்ன வேண்டும் (உடனடிமை)

பேணும் சம சந்தர்ப்பம்
பெருகும் சுதந்தரத்தால்
ஆணும் பெண்ணும் இன்புற வேண்டும்—
வேறென்ன வேண்டும் (உடனடிமை)

இவ்வாறு மாதர் விடுதலைக்காகப் பாடும் ஜீவா தொழிலாளர்களின் அவல நிலையைக் கண்டு மனம் கலங்குகிறார். தொழிலாளர்கள் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருந்த காலம். 1935-ம் ஆண்டில் இப்பாடலை ஜீவா இயற்றினார்.

''காலுக்குச் செருப்பு மில்லை
கால்வயிற்றுக் கூழுமில்லை
பாழுக் குழைத்தோ மடா-என் தோழனே
பசையற்றுப் போனோமடா. (காலுக்கு)

குண்டிக்கொரு துண்டுமில்லை
கொல்வறுமை தாளவில்லை
ஒண்டக் குடிசை யில்லை-என் தோழனே
உழைத்திளைத்துப் போனோ மடா.
(காலுக்கு)
பாலின்றிப் பிள்ளை அழும்
பட்டினியால் தாயழுவாள்
வேலையின்றி நாமழுவோம்-என் தோழனே
(காலுக்கு)

கோணல் மாணல் திட்டங்களால்
கோடி கோடி யாய்க்குவித்தே
வீணர்சிலர் கொழுக்கக் கண்டால்—என்
வெஞ்சினம் பொங்கு தடா. [தோழனே
(காலுக்கு)

வீடு முச்சூடும் அழும்
மாடமாளி கைய வர்க்கு
மன்னர்மகு டம வர்க்கு
வாட வறுமை நமக்கு—என் தோழனே
வந்திடல் வாழ்வெ தற்கு!'' (காலுக்கு)

இவ்வாறு துன்ப, துயரில் சிக்கித் தவித்த மக்களைப் பற்றியே பாடி, அம்மக்களின் முன்னேற்றத்திற்காக தமது மூச்சுள்ளவரை பாடுபட்டு மறைந்தபொதுவுடைமை இயக்கத்தின் செயல் வீரர் ஜீவா என்றால் அது மிகையாகாது.

நன்றி: சென்னை வானொலி

# ஏழைகளுக்குக் கடன் நிவாரணம்

**1982**-ம் ஆண்டு தமிழ்நாடு அரசு கடன் நிவாரண அவசரச்சட்டம் மாநில அரசு அறிவித்துள்ளது. இந்த ஆண்டு ஆகஸ்டு 24-ஆம் தேதியிலிருந்து இந்த அவசரச் சட்டம் அமலுக்கு வந்துள்ளது.

இந்த அவசரச் சட்டம் 31.12.1981 அன்று முடிவடைந்த ஆண்டில் ஆண்டுக் குடும்ப மொத்த வருமானம் ரூ.4800 - க்கு மேற்படாமல் உள்ள கிராம மற்றும் நகர்ப்புறத்தில் வசிக்கின்ற அனைவரும் 24.8.82 நாளுக்கு முன்பு வாங்கியுள்ள கடன்களை முழுவதுமாக ரத்து செய்ய வகை செய்கிறது. ஆனால், கடன் கொடுத்தவர் ஒரு விதவை அல்லது பெற்றோர்களை இழந்த உரிய வயது வராத சிறுமி அல்லது சிறுவன் அல்லது மணவிலக்கு அளிக்கப்பட்டுள்ள பெண் ஆக இருந்து அவர்களது சொத்து மதிப்பு இக்கடன் உட்பட ரூ.25,000-க்கு மேல் போகாமலிருப்பின் இச்சட்டம் பொருந்தாது. அரசு, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்கு இச்சட்டத்தின் கீழ் விதிவிலக்கு அளிக்கப்படுகிறது.

ஒரு சில வரிவிதிப்புகளுக்கு உட்பட்டுள்ள நபர்கள் இச்சட்டத்தினால் பயன் பெற மாட்டார்கள்.

இந்த அவசரச்சட்டம் வருவாய்த்துறையைச் சேர்ந்த தாசில்தார்களால் அமல் நடத்தப்படும். இந்த அவசரச் சட்டத்தின் கீழ் நிவாரணம் பெற விரும்பும் கடனாளிகள், தங்களுடைய ஆண்டு வருமானச் சான்றிதழ் மற்றும் தாசில்தார் அல்லது துணை தாசில்தார் அல்லது வட்டார வளர்ச்சி அலுவலர் அல்லது கூட்டுறவு சார் பதிவாளர் எவரேனும் ஒருவர் முன்பு செய்யப்பட்ட உறுதிப் பிரமாணம் இவற்றை இணைத்து நிவாரணம் கோரி சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கு அவசரச்சட்டம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 6 மாத காலத்திற்குள் மனு செய்ய வேண்டும். நியாயமான காரணங்களிருந்தால் மனு செய்வதற்கு மேலும் ஒரு மாத காலம் அவகாசம் கொடுப்பதற்குத் தாசில்தாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட படிவங்களை அந்தந்த தாலூக்கா அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.



## சிறப்புத் திருமணம்



வட ஆர்க்காடு மாவட்டம் ரத்னகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலில் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களால் 70 ஜோடிகளுக்கு இலவசத் திருமணங்கள் 2.9.82 அன்று காலை நடத்தி வைக்கப்பட்டன.

விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றும் பொழுது, "நாம் அனைவரும் ஆண்டவனுடைய பிள்ளைகள். கடவுளின் படைப்பில் ஏற்றத் தாழ்வுகள் கிடையாது. ஆகவே, இங்கு நடைபெறுகின்ற இத்திருமணத்தை இலவசத் திருமணம் என்று குறிப்பிட வேண்டும். அத்துடன் இத்திருமணங்களைத் தங்களுடைய கிராமங்களில் நடத்தி இருந்தால் மிகக் குறைவான நபர்களே வாழ்த்தி இருப்பார்கள். ஆனால் இங்கு நடைபெறுகின்ற காரணத்தினால் இத்திருமணங்க்ள மதுரையில் மீனாட்சியம்மனுககு நடைபெற்றதாகப் புராணங்கள் கூறும் திருமணத்துடன் ஒப்பிடத்தக்க வகையில் ஆயிரக்கணக்கானவர் வாழ்த்தச் சிறப்பாக நடைபெற்றன்."



# அனைத்துலக எழுத்தறிவு நாள் விழா!

கல்வி அறிவு பெறுவது, மனித உரிமைகளைப் பெறுவதற்கு அடிப்படை என்பதை வலியுறுத்தவே, ஐக்கிய நாடுகள் கல்வி மற்றும் சமூகப் பண்பாட்டு நிறுவனம், 1961-ஆம் ஆண்டிலிருந்து, செப்டம்பர் எட்டாம் தேதியினை அகில உலக எழுத்தறிவு நாளாகக் கொண்டாடி வருகிறது.

இந்தியாவில், பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டத்தில் ஒன்றாக வயது வந்தோர் கல்வி சேர்க்கப்பட்ட பின், அதன் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. 15-35 வயதுக்குட்பட்டோரிடையே காணப்படும் கல்வி அறிவின்மையை 1990-க்குள் ஒழித்துவிடப் புதிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதே சமயத்தில் அனைவருக்கும் தொடக்கக் கல்வியளிக்கும் திட்டம் துரிதப்படுத்தப்படுகிறது. இதற்காகவே பள்ளியில் கற்க வரும் குழந்தைகளுக்கு ஊக்கமளிக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவச சத்துணவுத் திட்டத்தினை மாநிலம் முழுவதும் கொண்டு வந்திருக்கிறார். இது, பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறது. படிப்பைப் பாதியிலேயே விட்டு விடாமல் தடுக்கவும் செய்கிறது.

அனைத்துலக எழுத்தறிவு நாள், சென்னை லேடி வில்லிங்டன் கல்வியியல் கல்லூரியில், செப்டம்பர் 7ந் தேதி மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் மற்றும் திரு. நெ. து. சுந்தர வடிவேலு, கல்வி அறிவியல் தொழில் நுட்பத்துறை செயலர் மற்றும் ஆணையர் திரு செ. இராமதாஸ், இ.ஆ.ப. அரிமா வசந்தலால் சி. மேத்தா ஆகியோர் கலந்து கொண்டு, நம் நாட்டில் பரவலாக நிலவுகின்ற கல்வி அறியாமையை ஒழிக்க வேண்டுவதன் அவசியத்தையும் அவசரத்தையும் எடுத்துக் காட்டினர்.

இந்த விழா, மற்றொரு முறையிலும் முக்கியத்துவம் பெறுகிறது. இந்நன்னாளில்தான், உழைப்போர் பல் நோக்குக் கல்வி நிறுவனமும் (ஷிரமிக் வித்யாபீட்) தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் மைய அரசின் முழு உதவியுடன், பள்ளிசாராக் கல்வி மற்றும் வயது வந்தோர் கல்வி நிறுவனத்தின் ஒரு பிரிவாக இயங்கும்.

அதன் நோக்கங்கள் என்னென்ன?

தொழில்கள் நிறைந்த பகுதிகளில் வாழும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் கல்வித் தேவையை நிறைவு செய்யும் வகையில் கல்வி நிகழ்ச்சியையும், பிற நிகழ்ச்சியையும் திட்டமிட்டு, நடத்துதல்.

உழைக்கும் மக்கள் பல்வகையினர்; அவர்கள் கல்வித் தேவைகளும் பல்வேறுபட்டவை. அவற்றைச் சுற்றாய்வின் மூலம் கண்டறிதலையும் உறுதிப்படுத்தலையும் மேற்கொள்ளுதல்.

பலவகைப்பட்ட தொழிலாளர்களுக்காகச் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தும் கல்வி நிறுவனங்களுடன் ஒத்துழைத்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

— ஏ. ஜ. ஐ.

## முதியோர் கல்வி இயக்ககம்: தமிழகத்திற்கு விருது



முதியோர் கல்வியைப் பரப்புவதில் தமிழ்நாடு முறைசாரா மற்றும் முதியோர் கல்வி இயக்ககம் புரிந்துள்ள சிறந்த தொண்டினைப் பாராட்டி யுனெஸ்கோ விருது அளிக்கப் பட்டுள்ளது.

இந்த விருதுடன் ரூ6868.60க்கான அமெரிக்கா டாலர்களும், பதக்கமும், பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முறைசாராக் கல்வி மற்றும் முதியோர் கல்வி இயக்குநர் திரு ஜே. ஏ. ரயான் அவர்கள் தமிழக அரசின் சார்பில் இவ்விருதினைப் பெற்றுக் கொண்டார்.

யுனெஸ்கோ நிறுவனத்தின் இப் பரிசுக்கு 33 அமைப்புகளின் தொண்டு பற்றிப் பரிசீலிக்கப் பட்டது. பிறகு, தமிழ்நாடு முறைசாராக் கல்வி மற்றும் முதியோர் கல்வி இயக்ககத்திற்கு விருது வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

இந்த இயக்ககம், எழுத்தறிவிக்கும் பணியைப் பரந்த அளவில் செய்து, 10 இலட்சம் பேருக்கு எழுத்தறிவைப் புகட்டி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.



# விளையாட்டுத் துறையில் வியத்தகு ஊக்கம்

தமிழகத்தில், விளையாட்டுத் துறை மூலம் இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 1977-ஆம் ஆண்டு விளையாட்டுத் துறை இயக்ககம் தோற்றுவிக்கப் பட்டது இதன்பணிகள் மாவட்டங்களில் எல்லாம் சிறப்புற வேண்டும் என்ற நோக்குடன் 1981-ஆம் ஆண்டு மாவட்டங்கள் தோறும் விளையாட்டு அலுவலர்கள் தமிழக அரசால் நியமிக்கப்பட்டார்கள்.

மதுரை மாவட்டத்தில், கிராமப் பகுதிகளில் விளையாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு 47 ஊரக விளையாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிக்கன விளையாட்டு அரங்கங்கள் மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர், ஆண்டிப்பட்டி, டி. கல்லுப்பட்டி ஏ. வெள்ளாளப்பட்டி ஆகிய நான்கு இடங்களில் கட்டப்பட உள்ளன. இதற்காக அரசு 1980 ஆம் ஆண்டு அனுமதி அளித்துள்ளது. சிக்கன விளையாட்டு அரங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு ரூ. 35 ஆயிரம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகரில் உள்ளது போல் திண்டுக்கல்லில் பெரிய விளையாட்டு அரங்கம் ஒன்று கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த விளையாட்டு அரங்கத்திற்கான நிலம் கையகப் படுத்தப்பட்டு சுற்றிலும் வேலி அமைப்பதற்கும் நிலத்தைச்சமப் படுத்துவதற்கும் என ரூ. 55 ஆயிரம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது.

**நிர்வகிப்போர்**

மதுரை மாவட்டவிளையாட்டுக் குழுவிற்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. ஆளுடையபிள்ளை (இ.ஆ.ப.) அவர்கள் தலைவராகவும் துணைத் தலைவராக மதுரை தெற்கு மாவட்ட காவல்துறை அதிகாரி, பொருளாளராக மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களும் உள்ளனர்.

அரசுத்துறை அலுவலர்கள் அல்லாத அங்கத்தினர்களாக முன்னாள் மதுரை மாநகராட்சித் துணை மேயர் திரு நவநீதகிருஷ்ணன் அவர்களும், கம்பம்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர். டி. கோபால் அவர்களும், திரு பஷீர் அகமது அவர்களும் உள்ளனர். மதுரை மாவட்டத்தில் விளையாட்டுத் துறையின் நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சீரிய ஆலோசனையின் பேரில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு மதுரையில் விழைபணி மன்றம் (Hobby Centre) அமைக்கத் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், மதுரையில் இளமையில் தெரிந்தெடுத்தல் (16 வயதுக்கு உள்பட்டோர் - Catch them Young ) இளம் சிறார்களுக்குப் பயிற்சியளித்தல் (Catch them very young - 5 வயதுக்குக் கீழானோர்) ஆகியோர்களை எந்த விளையாட்டில் விருப்பம் உள்ளவர்கள் என அறிந்து அவ்வத்துறையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

மதுரையில் விளையாட்டு விடுதி ( Sports Hostel ) ஒன்று உள்ளது. இங்கு அறுபத்து ஒன்று மாணவர்களுக்குப் பல்வேறு விளையாட்டுக்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் சத்துள்ள உணவுகள் இவ்விடுதி மூலம் வழங்கப்படுகின்றன. விளையாட்டில் திறமையும் ஊக்கமும் உள்ள ஒரு மாணவனுக்கு மாதம் ஒன்றுக்குத் தமிழக அரசு ரூ. 250 வீதம் செலவழிக்கிறது. உதை பந்து (Foot Ball) கூடைப்பந்து ( Basket Ball ) தடகளம் ( Athelitics ) ஆகிய விளையாட்டுகளில் தீவிரமாகப் பயிற்சியளிக்கப்படுகிறது மதுரையில்.

இங்கு நடந்த மாநில அளவிலான 'வைகை அதெலிடிக் விளையாட்டுப் போட்டி'களில் இங்குள்ள மாணவர் டி. சௌந்திர பாண்டியன் என்பவர் 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், உயரத்தாண்டுதல், நீளத்தாண்டுதல், சாட்புட் ஆகியவைகளில் மாநில அளவில் சாம்பியன் பட்டம் வாங்கியுள்ளார். மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஐந்து விளையாட்டுப் பயிற்சியாளர்கள் உள்ளனர். இந்த ஸ்டேடியத்தில் ஆண்களும் பெண்களுமாக எல்லா வயதினரும் சுமார் 200க்குமேல் ஒவ்வொரு நாளும் பயிற்சி பெறுகிறார்கள்.

**'டில்லி சலோ'**

இங்குள்ள மாணவர்களுக்குத் தனிப்பட்ட விடுதி வசதிகள் இல்லாதிருப்பதன் காரணமாகப் புதியதாக ஒரு விடுதி கட்ட தமிழக அரசு ஒரு லட்சம் ரூபாய் அனுமதி அளித்துள்ளது. கட்டட வேலை விரைவில் துவங்கப்பட உள்ளது. நவம்பரில் டெல்லியில் நடைபெறும் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நடுவர்களாகப் பங்கேற்பதற்காக மதுரை மாவட்டத்திலிருந்து திரு எஸ். சுந்தரராஜன், திரு எஸ். வெங்கடாசலபதி ஆகிய இரு பயிற்சியாளர்கள் கூடைப்பந்து, தடகளம் ( Athelitics ) ஆகியவற்றிற்கென்றே டெல்லி செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மதுரை மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு எப். இஸேக்கியல், இத்துறை மேம்பாட்டில் ஊக்கத்தோடு செயல்பட்டு வருகிறார்.

மதுரை மாவட்டத்தில் 55,000 எக்டேர் தேக்கி வைக்கப்படும் நீர் நிலைகளும் 35,000 எக்டேர், ஆறு வாய்க்கால் போன்ற நீர் நிலைகளும் உள்ளன. இந்நீர் நிலைகளில் கட்லா, ரோகு, மிருகால், சாதாக் கெண்டை, மீன்குஞ்சுகளை இருப்பு செய்து கலப்பின மீன் வளர்ப்பினைச் செயல்படுத்த ஏராளமான வாய்ப்பு உள்ளது.

தற்சமயம் மீன் துறைவைகை, சாத்தியாறு, மஞ்சளாறு, மருதாநதி, வரதமாநதி மற்றும் பாலாறு, பொறந்தலாறு ஆகிய இடங்களில் உள்ள நீர்த் தேக்கங்களில் மீன் வளர்ப்பினைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றது. இந்நீர்த்தேக்கங்களில் ஆண்டு தோறும் இருபது இலட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப்படுகின்றன. மேலும், நிலக்கோட்டைத் தாலுகாவில் உள்ள வடகரை, தென்கரை மற்றும் தேனூர் ஆகிய பெரும் பாசனக் குளங்களில் தீவிர மீன் வளர்ப்புத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### ஊராட்சிக்குளங்களில்

1981-82-ஆம் ஆண்டு முதல், இத்துறையின் தொழில்நுட்ப உதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை (கள்ளிக்குடி, வாடிப்பட்டி, திருமங்கலம், டி. கல்லுப்பட்டி, மேலூர் ஆகிய ஐந்து) ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள 86 குளங்களில் 100 எக்டேர் நீர்ப்பரப்பில் கலப்பின மீன்வளர்ப்பினை மேற்கொண்டு வருகின்றது. இக்குளங்களில் இவ்வாண்டு 5 லட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படவுள்ளன. இவ்வாண்டு மேலும் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் மேலும் 100 எக்டேர் நீர்ப்பரப்பில்இத்திட்டத்தினைச் செயல்படுத்தி விரிவுபடுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்கெனத் தமிழ்நாடு அரசு ஆண்டுக்கு ரூ. 2.9 இலட்சம் வழங்கி வருகின்றது. இதில் அரசு மானியம் 75 சதவீதம். இதன் மூலம் கிராம மக்களுக்கு உயரினக் கெண்டை மீன்கள் குறைந்த விலையில் கிடைத்திட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 1981-82ல் ரூ. 2 லட்சம், 1982-83ல் ரூ. 29 லட்சம் உதவி வழங்கப்பட்டுள்ளது.

### பாசனக் குளங்களில் மீன் வளர்ப்பு:

நடப்பாண்டில் சுமார் 1,300 எக்டேர் நீர்ப்பரப்புடைய 16 பெரும் பாசனக் குளங்களினை மீன்துறையே மேற்கொண்டு கலப்பின மீன் வளர்ப்பினைத் தீவிரமாகச் செயல்படுத்திட அரசு ஒப்புதல் தந்துள்ளது. இவைகளில் 12 இலட்சம் உயர் கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படும். இதன் மூலம் திருப்பரங்குன்றம், மதுரை, உத்தமபாளையம் சின்னமனூர், போடிநாயக்கனூர், பெரியகுளம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் குறைந்த விலையில் புரதச்சத்து நிறைந்த மீன்களைப் பெற்றிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை:

மீன்துறை சுமார் 7,000 எக்டேர் நீர்ப்பரப்பினில் விஞ்ஞானமுறை மீன் வளர்ப்பினை மேற்கொண்டுள்ளது. ஆயினும், துறை மட்டுமே இம்முறையைக் கையாளாமல் கிராம மக்களுக்கும் இம்முறையைப் பயன்படுத்தி அதிக இலாபம் ஈட்டி பொருளாதார மேம்பாடு அடையவும், மீன் உற்பத்தி பெருகிடவும் வேண்டும் என்பதன் அடிப்படையில் 1978-ஆம் ஆண்டு முதல் மதுரை மாவட்டத்தில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் செயல்பட்டு வருகின்றது 1981-82-ல் மதுரை மாவட்டத்தில் உள்ள 300 மீன் வளர்ப்போர் முகமையின் மூலம் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மீன் வளர்ப்போர் முகமையின் மூலம் கனரா வங்கியிடமிருந்து கடனுதவி பெற்று சுமார் 250 எக்டேர் நீர்ப்பரப்பில் 8 இலட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு தீவிர மீன்வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இத்திட்டத்தின் மூலம், மீன் வளர்ப்போர்க்கு அரசு மானியமும் வழங்கப்பட்டு வருகின்றது. தீவிர மீன் வளர்ப்பில் அதிக அளவில் மீன் வளர்ப்போர் இலாபம் பெற்று வருவதால், கிராம மக்களுக்கு மீன் வளர்ப்பில் ஆர்வம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### மீன் வளர்ச்சிக் கழகப் பணிகள்

மீனவருக்குத் தாங்கள் பிடித்து வரும் மீன்களுக்கு நியாயவிலை பெறவும், பொதுமக்களுக்குத் தரமான மீன்கள் விற்பனை செய்யப்படவும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மதுரையில் பன்னிரண்டு மீன் அங்காடிகளை நடத்தி வருகின்றது. இவ்வாண்டு மேலும் ஐந்து மீன் அங்காடிகள் திறக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### தூண்டுதல் முறையில் மீன்பெருக்கத் திட்டம்:

உயரினக் கெண்டைகளை வளர்த்திடத் தேவையான மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். உயரினக்கெண்டைகள், தேக்கப்பட்ட நீர்நிலைகளில் முட்டையிடா. எனவே உயரினக் கெண்டைகள் வளர்க்கப்படப்போதுமான அளவில் நீர் நிலைகளில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட வேண்டும். மீன்

# மதுரை மாவட்டத்தில் மீன் வளம்





குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கென மதுரை மாவட்டத்தில், வைகை அணை, மஞ்சளாறு அணை, சாத்தியாறு அணை, பாலாறு - பொறந்தலாறு ஆகிய நான்கு மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில் மீன்குஞ்சுத் தேவை அதிகரித்து வருவதால், தேவையைப் பூர்த்தி செய்திட மஞ்சளாறு மீன் பண்ணை ரூ. 9 இலட்சம் செலவில் விரிவாக்கப்பட்டு வருகின்றது. மேலும் பாலாறு பொறந்தலாறு அணையில் உள்ள மீன் பண்ணை ரூ. 12 இலட்சம் செலவில் விரிவாக்கப்பட அரசுஆணை வழங்கியுள்ளது. இத்திட்டம் இவ்வாண்டுசெயல்படுத்தப்படும். இப்பண்ணைகள் மூலம் ஒரு கோடிக்கும் அதிகமான மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ஆண்டுதோறும் அரசுக்கு ரூ. 15 இலட்சம் ஈட்டித்தரும். மேலும், மதுரை மாவட்டத்தில் மீன் உற்பத்தி ஆண்டுக்கு 1,500 டன் அளவில் இருந்து வருகின்றது. கலப்பின மீன்வளர்ப்பு முறையினால், இன்னமும் ஓரிரு ஆண்டுகளில் மீன்உற்பத்தி மதுரை மாவட்டத்தில் பத்து மடங்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்:**

மீன்வளர்ப்பு மூலம் கிராம மக்கள் வளம் பெற வேண்டும் என்ற நோக்கிற்காக மதுரை மாவட்டத்தில் 12 மீன்பிடிப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் மீன் பிடிப்போரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் பெரும் பங்கு வகித்து வருகின்றன.

**புதிதாக அலுவலகம்**

மதுரை மாவட்டத்தில் மீன் வளத்தினைப் பெருக்கிட நல்ல வாய்ப்புள்ளதை முன்னிட்டு இவ்வாண்டு மதுரையில், புதிதாக ஓர் மீன்துறை துணை இயக்குநர் அலுவலகத்தினை உருவாக்கியுள்ளது. மேலும் மீன்வளர்ப்பு இலாபகரமான தொழில் என்பதைக் கிராம மக்களுக்கு எடுத்துரைக்கவும், தமிழ்நாடு அரசு மீன்வளர்ப்புக்கும் மீன்வளர்ப்போருக்கும் செய்துவரும் பணிகள் குறித்துப் பொதுமக்களுக்கு விளக்கவும் ஓர் மீன்துறை விரிவாக்கப் பிரிவு மதுரையில் ஏற்படுத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கலப்பின மீன்வளர்ப்பு முறையினைக் கையாண்டால் மீன் வளர்ப்பினை உப தொழிலாக அன்றி முதன்மைத் தொழிலாகச் செயல்படுத்த இயலும் என்பது தெளிவு.

**மலைப்பகுதி நீர் நிலைகளில் மீன் வளம்:**

மலைப் பிரதேசங்களில் உள்ள குளிர் நீர் நிலைகளில் தூண்டில் மீன் பிடித்தல், வெளிநாட்டவர்க்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்காகும். மதுரை மாவட்டத்தில் உள்ள குறிஞ்சி நகரமான கொடைக்கானலில் மீன்துறை வெளிநாட்டுப் பயணிகள் மனங்கவரஇப்பொழுது கைக்கொள்ள வசதியாகத் தூண்டில் மீன்பிடிப்புக்கு வழிவகுத்துள்ளது. மேலும் இதுபோன்று சுருளியாறு நீர்த்தேக்கங்களிலும் மீன்பிடிப்பினை நடைமுறைப்படுத்த நடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகின்றது.





# சமுதாயப் புரட்சிக்கு வித்திடும் சத்துணவுத் திட்டம்

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்றும் ''வயிற்றுக்குச் சோறிட வேண்டும்'' இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம் பயிற்றுப்பல கல்வி தந்து பாரை உயர்த்திட வேண்டும்'' என்றும் பாடிய மகாகவி பாரதியாரின் கனவை நனவாக்கும் வகையில் சென்னை மாநகரில் மாநகராட்சி, பள்ளிக் கல்வி-சமூகநலத்துறை ஆகிய மூன்று பெரிய இயக்ககங்களும் ஒன்றாக இணைந்து ''முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைப் பொறுப்பேற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.9.'82 அன்று துவக்கி வைத்தன.

சென்னை கான்ரான்ஸ்மித் சாலையிலுள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற இந்த இனிய விழாவுக்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தலைமை வகித்தார்.

விழாவை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். சத்துணவுத் திட்ட உயர் மட்டக்குழு உறுப்பினர் செல்வி ஜெயலலிதா அவர்கள், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் டாக்டர் கி.வேங்கட சுப்பிரமணியன் அவர்கள் ஆகியோர் விழாவில் பங்கேற்று உரையாற்றினார்கள். பிறகு அனைவரும் குழந்தைகளுடன் அமர்ந்து சத்துணவு அருந்தினார்கள்.

இத்திட்டத்தினால் சென்னை மாநகரில் இரண்டு வயது முதல் ஒன்பது வயதுவரை உள்ள 2 லட்சத்து 80 ஆயிரம் குழந்தைகள் பயனுறுகிறார்கள். அதில் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள 1 லட்சத்து 255 குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியின் அதிகாரிகள், அலுவலர்கள், சிப்பந்திகள் சார்பில் ரூ. 1 லட்சத்து 50 ஆயிரமும், மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் சார்பில் ரூ. 79 ஆயிரத்து 395ம் சத்துணவுத் திட்டத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி தனி அலுவலர்திரு டி.டி. சுந்தர்ராஜ், இ.ஆ.ப அவர்கள் வரவேற்றார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு: ஜி. ஆனந்தன்**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சென்னை நகர்ப்பகுதிக்கான சத்துணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில்,

''பேரறிஞர் அண்ணா வாழ்நாள் முழுவதும் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற தத்துவத்தை இலக்கணமாக ஆட்சி அமைத்து நடத்திக் காட்டினார்கள். அந்த அரசவைக்கு வடிவம் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். அண்ணா எந்த ஏழைகளுக்காகப் பாடுபட்டு அவர்களின் முன்னேற்றத்திற்காகத்

திட்டம் தீட்டினாரோ அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து தொய்வு இல்லாமல் இன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் செய்து வருகிறார்.

கிராமப்புற ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டம் வழங்கப்படுகிறது. 2-வது கட்டமாக நகர்ப்புறங்களிலும் இந்தத் திட்டம் அண்ணா பிறந்த இந்த நன்னாளில் தொடங்கப்படுகிறது. இந்தச் சத்துணவுத் திட்டத்தை எல்லாரும் பாராட்டுகிறார்கள். பத்திரிகைகளும் பாராட்டுகின்றன. மற்றமாநிலத்தவரும் பாராட்டி வருகிறார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையை மறுப்போர் யாரும் இல்லை.



நாடு சுதந்திரம் அடைந்த பிறகு எத்தனையோ திட்டங்கள் நாட்டு மக்களின் நலனுக்காக கொண்டு வரப்பட்டு இருக்கின்றன. புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் திட்டத்திற்குக் கிடைத்த ஆதரவைப் போல எந்தத் திட்டத்திற்கும் ஆதரவு கிடைக்க வில்லை" என்று குறிப்பிட்டார்.

சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர் செல்வி. ஜெயலலிதா அவர்கள் பேசுகையில்,

"தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தாயுள்ளத்தோடு ஏழைக் குழந்தைகளுக்கான இலவசச் சத்துணவுத் திட்டத்தைக்கொண்டு வந்துள்ளார்கள். சாதி-மத-பேதமின்றி சமத்துவ சமூகம் நிலவவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் புரட்சித் தலைவர் கொண்டு வந்த திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட அனைவரும் அரசுடன் ஒத்துழைக்கவும் தங்களால் இயன்ற அளவில் உதவி புரியவும்முன்வர வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.

சமூகநலத்துறை இயக்குநர் திருமதி யாஸ்மீன் அகமது இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

விழாவில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.கா. திரவியம் இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் திரு நடராசன் ,இ.ஆ.ப., அவர்கள் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன், இ.ஆ.ப., அவர்கள் உள்பட ஏராளமான அதிகாரிகளும் ஆசிரியர் மாணவ மாணவியர் பொதுமக்களும் பங்கேற்றனர்.

சத்துணவுத் திட்டம், ஒரு சமுதாயப் புரட்சிக்கு எடுத்துக்காட்டான திட்டம் என்று கூறினால் அது மிகையாகாது.

---

# தொழுநோயாளிகள் மறுவாழ்வு மையங்கள்!

காந்தியடிகள் பிறந்த தினத்தைக் குறிக்குமுகமாக, அக்டோபரில் தொழுநோய்த் தடுப்பு வாரம் அனுசரிக்கப்படுகிறது.

இருபது அம்சத் திட்டத்தின் 14வது அம்சத்தின் கீழுள்ள தொழுநோய்த் தடுப்புத் திட்டம் தமிழ்நாட்டில் தேசிய தொழுநோய்த் தடுப்புத் திட்டம் போன்று செயல்படுத்தப்படுகின்றது.

தொழுநோய்க்குழுஅனைத்துத் தொழுநோயாளிகளுக்கு வசதியாகக் கிராமங்களுக்கு அருகிலுள்ள சாலைகளில் தேவைப்படும் மருந்துகளுடன் இருக்கும். மூன்று மைல் சுற்றளவிலுள்ள தொழுநோயாளிகள் இக்குழுவிடம் வந்து நோயின் தன்மையைக் காட்டி மருந்து பெற்றுச் செல்கிறார்கள். இம்முறையினால் தொழுநோயாளிகள் தங்களது கிராமங்களில் தங்களது குடும்பத்தாருடன் தொடர்ந்து வசிக்கலாம். அவர்களுக்கு ஒரு மாதத்திற்கான மருந்து அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பலவேறு மாவட்டங்களில் தொழுநோயாளிகளுக்கான மறுவாழ்வு மையங்கள் 10 இருக்கின்றன. ஏழை தொழுநோயாளிகளை இம் மையங்களில் சேர்த்து சிகிச்சை அளிப்பதுடன், பல்வேறுதொழில்களுக்கான பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

தேசிய தொழுநோய்த் தடுப்பு திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 441 இலட்சம் பேர்கள் பயன் பெற்றுள்ளார்கள். தொழுநோயாளிகள் 7.8 இலட்சம் பேர்கள் இருக்கக்கூடுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாண்டு ஜூன் மாதம் 30ம் தேதிவரை 7,39,893 தொழுநோயாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் 5,87,975 பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. 1,11,855 தொழுநோயாளிகள் தொழுநோயிலிருந்து குணமடைந்துள்ளார்கள்.

இவ்வாண்டு ஜூன் மாதம் வரை 29,19,651 பள்ளிக் குழந்தைகள் சோதிக்கப்பட்டனர். 5,013 குழந்தைகளுக்குத் தொழுநோய் அறிகுறி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தொழுநோயைக் கண்டுபிடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உடனடியாகக் குணமடைய குறிப்பிட்ட காலத்திற்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.




அரசு பொது மருத்துவமனை

# சென்னை மருத்துவக்கல்லூரி - தலைமை மருத்துவமனை

தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை மாநகரில் பாமரருக்கும், பாவலருக்கும் மருத்துவத் தொண்டு செய்வதே பணியாகக் கொண்டு விளங்குவது சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் தலைமை மருத்துவமனையாகும். இக்கல்லூரி 1855ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாள் மாண்புமிகு சர் பிரடரிக் ஆடம் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. தற்போதுள்ள தலைமை மருத்துவமனை 1753-ல் நிர்மாணிக்கப்பட்டது. மருத்துவ நிபுணர்கள் தங்கள் பணியில் சிறந்து விளங்க வேண்டுமாயின் வரன்முறை படுத்தப்பட்ட படிப்பும், பயிற்சியும் அவசியம் என்பதனை உணர்த்தவே இக்கல்லூரி தோன்றியது.

கல்லூரியின் முதலாண்டு வகுப்புகள் 10 பயிற்சியாளர்களையும், 11 இந்திய மருத்துவ மாணவர்களையும் கொண்டு ஆரம்பமானது. 1836-ல் கல்லூரிக்கான கட்டடம் கட்டி முடிக்கப் பெற்றது. முதலில் இரண்டு ஆண்டு காலச் சான்றிதழ்ப் பயிற்சி ( Certificate Course ) அளிக்கப்பட்டது. 1852 முதல் இப்பயிற்சி 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டு, வெற்றி பெறும் மாணவர்களுக்கு ''சென்னை மருத்துவக்கல்லூரியின் பட்டம்'' வழங்கப்பட்டது.

1850-ல் இந்நிலையம் பள்ளி நிலையிலிருந்து கல்லூரி நிலைக்கு உயர்த்தப்பட்டு, டாக்டர் ஜேம்ஸ் ஷா என்பவர் முதல்வராக நியமிக்கப்பட்டார். அவர் மகப்பேறு மருத்துவத்தில் ஆர்வமுடையவராதலால், கருவுற்ற மகளிருக்கான மற்றும் பேறுகால மருத்துவத் துறையில் ஐரோப்பியர் பெற்றிருந்த அறிவையும், அனுபவத்தையும், ஆற்றலையும் இந்திய கிராமிய மருத்துவத் தாதியர்களும் அறிந்து கொள்ளும் வண்ணம் திட்ட நடைமுறைகளைக் கொண்டுவந்தார்.

1923-ல் பனகல் அரசர் சென்னை மாநிலத்தின் முதல்வராயிருந்தபொழுது கிராமப்புற

டாக்டர் லலிதாகாமேஸ்வரன்
தலைவர்,
சென்னை மருத்துவக் கல்லூரி,
சென்னை.



தாய்சேய் நல மருத்துவமனை

மருத்துவ நிவாரணத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட்டது.

மேல்நாடுகளில் பெண்களை மருத்துவக் கல்வி பெற அனுமதிக்கலாமா என்பதே சர்ச்சைக்குரியதாக இருந்த காலத்தில், இந்தியாவிலும் வேறு எந்த மருத்துவப் பயிற்சி நிலையமும் பெண்களைச் சேர்த்துக் கொள்வதில் தயக்கம் காட்டி வந்த ஒரு காலகட்டத்தில் சென்னை மருத்துவக் கல்லூரி பெண்களை முதன் முதலாக 1875-ல் மாணவிகளாகச் சேர்த்துக் கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.



குழந்தைகள் நல மருந்தகம்

இந்தக்காலத்தில்தான் (1875) தேர்வு பெற்ற மாணவர்களுக்கு 'Licentiate in Medicine and Surgery' என்ற பட்டம் அளிக்கப்பட்டது. ஆனால் இதற்கும் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே எம். டி., மற்றும் எம்.எஸ் போன்ற மேல் நிலை பட்ட வகுப்புகளும் இருந்து வந்தமைக்குச் சான்றுகளுள்ளன. 1912-ல் தற்போதைய எம். பி. பி. எஸ். பட்டம் முதன்முதலாக வழங்கப் பட்டது. எம். டி., எம். எஸ்., போன்ற பட்டங்களும் எழுத்து முறை மற்றும் செய்முறைத் தேர்வுகளின் அடிப்படையில் அளிக்கப்படலாம் என்ற மாற்றம் கொண்டுவரப்பட்டது.

அதற்கு முன் ஆராய்ச்சிக் கட்டுரைகள் (Thesis) எழுதியே இத்தகு பட்டங்கள் வழங்கப் பட்டு வந்தன. 1934-ஆம் ஆண்டிலேயே எப். ஆர். சி. எஸ். போன்ற சிறப்புடைய தேர்வுகளை இக்கல்லூரி நடத்தும் சிறப்பும், தகுதியும் பெற்றிருந்தது.

1975-ல் இக்கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாடப் பெற்றது. இதன் பிறகு உலக அரங்கில் ஏற்பட்ட விரைவான அறிவியல் வளர்ச்சிக்கும், நாகரிக மேம்பாட்டிற்கும் ஏற்ப இக் கல்லூரியும் தனது பங்கினை ஆற்றத் தவறவில்லை. சென்னை மருத்துவக் கல்லூரியோடு இணைந்து இயங்கிவரும் சென்னை தலைமை மருத்துவ மனை தமிழ்நாட்டின் மிகப் பெரியதும், நம் இந்திய நாட்டின் குறிப்பிடத்தக்க மருத்துவமனைகளில் ஒன்றுமாகும்.

பதினேழாம் நூற்றாண்டிலேயே கிழக்கிந்தியக் கம்பெனியாரால் துவக்கி வைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இத் தலைமை மருத்துவமனை 1753-இல் தற்போதுள்ள இடத்தில் நிர்மாணிக்கப்பட்டது. இன்று இம் மருத்துவமனையில் 50-க்கும் மேற்பட்ட பிரிவுகளும் (Wards) 1800 படுக்கைகளும் உள்ளன.

ஆண்டொன்றிற்குச்சராசரியாக 25 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் புறநோயாளிகள் பிரிவில் மருத்துவ ஆலோசனை பெறுகின்றனர். சற்றேறக்குறைய 62,000 பொதுமக்கள் உள் நோயாளிகளாகச் சேர்ப்பிக்கப் பட்டு சிறப்பான மருத்துவக் கவனத்தின் கீழ் நிவாரணம் பெறுகின்றனர். 1200-க்கும் மேற் பட்ட மருத்துவ அதிகாரிகளும், செவிலியர்களும், இதர ஊழியர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

நாற்பதுக்கும் மேற்பட்ட சிறப்புத்துறைகள் சென்னை தலைமை மருத்துவ மனையில் இயங்கி வருகின்றன. கௌரவ மருத்துவ வல்லுநர்கள் இத்துறைகளின் தலைமைப் பொறுப்பேற்று நவீன கருவிகளையும், சாதனங்களையும், செவ்வனே பயன் படுத்தி பொதுமக்களுக்கு நிகரற்ற தொண்டாற்றி வருகின்றனர்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால்-நோய்க்கூறு இயல், ஊடுகதிர் நிழற்படஇயல், பால்வினை நோயியல், உடலியங்கியல் மருத்துவம், மரபியல், மருந்தியல், நுண்ணுயிரியல், சட்டம் சார்ந்த மருத்துவத் துறை, எலும்பு முறிவு சிகிச்சை, இருதய நோய்ப்பிரிவு, நரம்பியல் நோய்ப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, பேச்சுக் குறை மற்றும் காது கேளாதோருக்கு மறுவாழ்வு அளிக்கும் துறை, ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை, சிறுநீரகத் துறை, நாளமில்லா சுரப்பிகள் துறை, இரத்த நாள அறுவை சிகிச்சை, முதியோர் மருத்துவம், நீரிழிவு நோய்ப் பிரிவு, புற்று நோய்ப் பிரிவு, மனநோய்ப்பிரிவு எலும்புருக்கி அல்லது காசநோய்ப் பிரிவு, மருந்தியல் வேதியியல், உயிர் வேதியியல் போன்ற பல துறைகள் உள்ளன.

சென்னை மருத்துவக் கல்லூரியோடு இணைந்து செயலாற்றும்



செயற்கை உறுப்புகள் பொருத்தும் மருத்துவ மனை



காசநோய் ஆராய்ச்சி நிலையம்

சிறப்புடைய மற்ற நிலையங்களும் சென்னை மாநகரில் பல உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

**மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவ மனை**

சென்னை எழும்பூரில் உள்ள மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவ மனையில்தான் உலகிலேயே மிக அதிகமான மகப்பேறுகள் பார்க்கப்படுகின்றன. இஃது ஆசியாக் கண்டத்தின் தொன்மையான மருத்துவமனைகளில் ஒன்றாகும். இங்கு தனிச் சிறப்புமிக்க மேல்நிலை பட்டவகுப்புகளுக்குத் தீவிரப் பயிற்சி அளிக்கப்பட்டு உயர்வான கல்வித்தரம் காக்கப்படுகிறது.

**குழந்தைகள் நல நிலையம் மற்றும் மருத்துவ மனை**

சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல நிலையமே தமிழ் நாட்டில் குழந்தைகளுக்கென்றே இயங்கி வரும் தனி மருத்துவமனையாகும். குழந்தைகள் நலப்பராமரிப்பு, நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை முதலிய துறைகளில் இந்நிலையம் ஒரு புதிய திருப்பத்தையே ஏற்படுத்தி வருகிறது. இம்மருத்துவமனையிலும் எலும்பு முறிவுப் பிரிவு, ரணசிகிச்சைப் பிரிவு, இரத்த நோய்ப் பிரிவு முதலிய சிறப்புத் துறைகளும் உள்ளன.

**கண் மருத்துவ மனை**

உலகில் தொன்மைமிக்க மருத்துவ மனைகளில் இரண்டாவது இடம் வகிக்கிறது சென்னையிலுள்ள கண் மருத்துவமனை. தோற்றம் 1918. 1884-ல் தற்போதுள்ள இடத்தில் நிறுவப்பட்டது. ஆண்டொன்றிற்கு சுமார் 1,00,000-க்கும் மேற்பட்ட நோயாளிகள் இங்கே சிகிச்சை பெறுகின்றனர். 1948-லிருந்தே கண் வங்கி ஒன்று இத்துடன் இணைந்து இயங்கி வருகிறது. இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் இம்மருத்துவமனை அதிகாரிகளால் போற்றத்தக்க வகையில் நடத்தப்பட்டு வருகின்றன.

**கஸ்தூரிபா காந்தி பெண்கள் மருத்துவ மனை**

மக்கள் நெருக்கடி நிறைந்த பகுதியில் தாய்க்குலத்தினருக்கு சீரிய சேவை செய்வதன் பொருட்டு நிறுவப்பட்டதாகும் சென்னை- திருவல்லிக்கேணியிலுள்ள இம்மருத்துவமனை. இங்கும் முதுநிலை பட்டவகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**காசநோய் ஆராய்ச்சி நிலையம்**

காசநோய்ச் சிகிச்சை முறையில் புதுமையான அணுகுமுறைகளைப் புகுத்தியுள்ளது சேத்துப்பட்டிலுள்ள காசநோய் ஆய்வு நிலையம். மற்றைய மாநில மருத்துவ அதிகாரிகளும் பயிற்சி பெறும் மையமாக அமைந்துள்ளது இது.

**காசநோய் மறுவாழ்வு இல்லம்**

தாம்பரத்தில் உள்ள காசநோய் மறுவாழ்வு நிலையத்தில் காசநோயால் பீடிக்கப்பட்டவர்கள் தங்கி சிகிச்சையும், நிவாரணமும் பெற வசதியும், வாய்ப்பும் உள்ளன. நிவாரணத்திற்குப் பின் மறுவாழ்வுக்கான திட்டங்களும் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**மனநோய் மருத்துவ நிலையம்:**

தமிழ்நாட்டில், கீழ்ப்பாக்கத்திலுள்ள மனநோய் மருத்துவமனையே தனிச்சிறப்புடைய மருத்துவமனையாகும். இங்கு பல்லாயிரக்கணக்கான மனநோயாளிகள், சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனை அதிகாரிகள் சென்னை தலைமை மருத்துவமனை நரம்பியல் துறை வல்லுநர்களோடு இணைந்து மூளை அறுவை சிகிச்சை மூலம் புதிய சிகிச்சை முறைகளைக் கையாண்டு வருகின்றனர்.

**செயற்கை உறுப்புகள் நிலையம்—உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இல்லம்:**

கை, கால் போன்ற உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புகள் பொருத்தப்பட்டு அவர்தம் குறையை உணராவண்ணம் புதுவாழ்வு வாழ வகை செய்யப்படுகின்றது கருணாநிதி நகரிலுள்ள இம்மருத்துவமனை மூலம். சமீபத்தில் உருவான இந்நிலையம் நல்ல வளர்ச்சி பெற்று வருகிறது. கடந்த உடல் ஊனமுற்றோர் ஆண்டில் (1981) பிரமிக்கத்தக்க பெரும் தொண்டு ஆற்றிச் சிறப்பு பெற்றுள்ளது.



காசநோய் மருத்துவமனை



கண் மருத்துவமனை

மேற்கூறிய மருத்துவமனைகளோடல்லாமல் சென்னை செவிலியர் கல்லூரியும், பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையும், மருந்தாளுநர்பயிற்சித் துறையும் சமீபகாலம் வரை சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்திருந்து இப்போது வளர்ச்சி பெற்ற நிலையில் இயங்கிவருகின்றன.

நரம்பியல் துறையில் தலையின் உட்புறத்தை அணு அணுவாகப் படம் பிடித்துக் காட்டும் 'Head seam' என்னும் சீரிய சாதனத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் சென்ற ஆண்டில் துவக்கி வைத்தார்கள். இருதய நோய்ப் பிரிவில் நுணுக்கம் வாய்ந்த இருதய எதிரொலி கருவியின் துணைகொண்டு சிக்கலான இருதய நோயின் தன்மையை அறிய இது உதவுகிறது. மாரடைப்பு நோயுற்றோருக்கு அவசர தீவிர சிகிச்சை இங்கே அளிக்கப்படுகிறது. புற்று நோய்க்குக் கோபால்ட் கதிரியக்கச் சிகிச்சை பெருமளவில் அளிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 2.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஊடு கதிர் நிழற் படங்கள் எடுக்கப்படுகின்றன. இங்குள்ள அணு கதிரியக்க மருத்துவத்துறை ( Nuclear Medicine ) நோயின் தன்மையை அறிவதற்கும், சிகிச்சை தருவதற்கும் உதவியாயுள்ளது.

சிறு நீரியல் துறையில் வெகுவாகப் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் செயற்கையாகக்கழிவுப் பொருட்களை அகற்றும் முறையும் ( Dialysis ) செயல்படுகிறது.

நாளமில்லாச் சுரப்பிகள்துறை 1975-ல் ஆரம்பிக்கப்பட்டது. இத்துறையில் நவீன முறை சோதனைகளைக் கொண்டு பற்பல அரியநோய்க் காரணங்களைக் கண்டறிய முடிகிறது. இரத்த நாள அறுவை சிகிச்சை தனிப் பிரிவொன்று 1981-ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைத் துறையில் உடல் ஊனங்களை மறைப்பதற்கும், உறுப்புகளின் இயக்கத்தை ஊக்குவிப்பதற்கும் வேண்டிய சிகிச்சைகள் தரப்படுகின்றன. உடலுறுப்புகளின் வெளிப்புறத் தோற்றத்தில் ஏற்படும் எதிர்பாரா இழப்புகளை உடலின் மற்ற இடத்திலிருந்து தசையினை எடுத்து, ஒட்டி, இழந்த தோற்றத்தினை மீட்டுத் தருகின்றனர்.

நீரிழிவு வியாதிப் பிரிவொன்றும் இம்மருத்துவமனையில் சிறப்பாக இயங்கி வருகிறது. நோய் நாடி, நோயின் முதல் நாடி தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், இளமை நீரிழிவு நோய்க்கு ( Juvenile diabeties) புதுமையான சிகிச்சை முறைகளைக் கண்டுபிடிக்க ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

குடல், இரைப்பை, சார்ந்த நோய்ப் பிரிவு (Gastro entrology): இப்பிரிவில் தீவிர சிகிச்சைமுறை பயன்படுத்தப்படுகிறது. இங்கு உடலின் உள் உறுப்புகளை நோக்கும் கருவியின் (endos-copy ) மூலம் இரைப்பைப்புண், புற்றுநோய், குடற்புண் முதலிய வியாதிகளைத் தெளிவாகக் கண்டறிய முடிகிறது. இப்பகுதியில் இச்சிகிச்சை தொடர்பான பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தீவிர சிகிச்சைப் பிரிவொன்று தனிப்பகுதியில்இயங்கிவருகிறது. இங்கு மிகவும் இக்கட்டான நிலையில் உள்ள நோயாளிகளுக்கும் உணர்வற்ற நிலை நோயாளிகளுக்கும் அவசரச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இருபத்து நான்கு மணி நேரமும் இயங்கும் சோதனைக்கூடமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. உயிர் வேதியியல் துறையில் ஒரு மணிக்கு 40 நோயாளிகளுக்கு இரத்தப் பரிசோதனை செய்யும் தானியங்கிச் சோதனைக் கருவி ( Auto-Analysis ) இரண்டாண்டுகளுக்கு முன் இங்கு நிறுவப்பட்டது. நுண்ணுயிரியல் பயிற்சி நிலையத்தில் ஆண்டுக்கு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்படுகின்றன. சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் சட்டச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வேண்டிய பரிசோதனைகளை நடத்தி காவல் துறையினருக்கு உதவி செய்கின்றனர்.

உடலியங்கியியல் மருத்துவமேல் நிலைக் கூடத்தில் உடற்கூறு சம்பந்தப்பட்ட ஆய்வுகள் நடத்தப் படுகின்றன. இத்துறையில் மரபியல் ஆய்வுக்கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. சுவாச இயங்கியல் பிரிவில், நுரையீரல் இயக்கம் குறித்த சோதனைகள் நடத்தப்படுகின்றன. மருந்தியல் நிலையத்தில் தாவரமூலிகைகளிலிருந்து மருந்து வகைகள் தயாரிப்பதற்கான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. மருந்துப் பொருட்கள் எவ்வகை மூலப் பொருட்களை எந்தெந்த அளவில் கலந்து தயாரிக்கப்பட்டால் உடல் நலம் மேம்பாடு அடையும் எனவும் ஆய்வு நடத்துகின்றனர். மத்திய நுண்ணாய்வுக் கூடத்தில் சில பிரத்யேக உயிர் வேதியியல் சோதனைகள் செய்யப்படுகின்றன. மேல்நிலை மருத்துவப் பட்டதாரிகளுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் ஆராய்ச்சிக்கட்டுரை ( Thesis ) தயாரிப்பதில் துணை நிற்கின்றனர்.

மேற்குறிப்பிட்டது போல், இத்தலைமை மருத்துவ மனையின் எல்லாச் சிறப்புத் துறைகளிலிருந்தும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்தியாவிலும், மற்றும் பன்னாட்டிலும், பல மருத்துவப் பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் வெளிவந்துள்ளன. மருத்துவ உலகில் மங்கா ஒளிவிளக்குகளாய்த் திகழ்ந்த டாக்டர் ரங்காச்சாரி, டாக்டர் குருசாமி முதலியார், டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் போன்றவர்களும், இத்தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்தவர்களே. மருத்துவக் கல்வி வல்லுநர்களுக்கான டாக்டர் பி. சி. ராய் பதக்கம் இக்கல்லூரியில் பணிபுரிந்த பல பேராசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சமீபத்தில் ஓய்வுபெற்ற பேராசிரியர் தம்பையா, பேராசிரியர் காமேஸ்வரன், தற்போதைய மருத்துவப் பேராசிரியர்.பத்மஸ்ரீ டாக்டர் கே. வி. திருவேங்கடம், அறுவை சிகிச்சை பேராசிரியர் டாக்டர் ஆர். சரத் சந்திரர், டாக்டர் சுப்பிரமணியம் ஆகியோர் இப்பதக்கம் பெற்றுள்ளனர்.

இதைப்போலவே அகிலஇந்திய மருத்துவக் கழகத்தினரின் அடிப்படை மருத்துவ ஆராய்ச்சிக்கான 'ஹரி ஓம் ஆஸ்ரம் அலெம்பிக்' பதக்கங்கள் மருந்தியல் துறை இயக்குநர் டாக்டர் லலிதா காமேஸ்வரனுக்கும் ஓய்வு பெற்ற உடலியங்கியல் பேராசிரியர் டாக்டர் சாரதா சுப்பிரமணியம் அவர்களுக்கும் வழங்கப் பெற்றிருக்கிறது.

மருத்துவத் துறை அறிவியல் வளர்ச்சிக்கோ அளவில்லை. சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் தலைமை மருத்துவமனையின் சேவைக்கோ எல்லையில்லை. இத்தகு மாபெரும் நிறுவனம் பொதுமக்களுக்கு மேலும் மேலும் சேவை செய்யக் காத்து நிற்கின்றது. இவ்வகையில் தமிழக அரசின் மற்றும் பொதுமக்களின் நல்லாதரவும் ஒத்துழைப்பும் வேண்டப் படுகின்றன.



லாசிரியர் விருதினை மாண்புமிகு கல்வி அமைச்சர்
் செ. அரங்கநாயகம் அவர்கள் வழங்குகிறார்.

# ஆசிரியர் தின விழா

'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்பது ஆன்றோர் வாக்கு.

நாளைத் தலைமுறைகளை உருவாக்கும் ஆசிரியப் பெருமக்களைப் பெருமைப்படுத்தும் வகையிலே, மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த நாளையொட்டி, ஆண்டுதோறும் செப்டம்பர் திங்கள் 5ஆம் நாளை 'ஆசிரியர் தின'மாகக் கொண்டாடி வருகிறோம்.

அந்த வகையில் இவ்வாண்டு செப்டம்பர் திங்கள் 5,6 தேதிகளில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நல்லாசிரியர் விருது வழங்கு விழாவும், சென்னை மாவட்ட ஆசிரியர் தின நிறைவு விழாவும் மிகச் சிறப்பாக நடந்தன.

தமிழ்நாட்டில் சிறப்பாகத் தொண்டாற்றியதற்காக 207 ஆசிரியர்களுக்குத் தமிழக அரசு 'நல்லாசிரியர்' விருதினை வழங்கியது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு டி.கே. சீனிவாசன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் நல்லாசிரியர் விருதுகளை வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழக அரசின் சத்துணவுத் திட்டம் வெற்றிகரமாக நடந்து வருகிறது என்றால், அதற்குக் காரணமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள். இந்தச் சமுதாயத்தில் கல்வி அறிவு ஒன்றால்தான் ஏற்றத் தாழ்வைப் போக்க முடியும். பெற்றோரின் அந்த எண்ணத்தை நிறைவேற்றிப் பிள்ளைகளிடம் அறிவையும், பண்பையும் வளர்க்கப் பாடுபடுபவர்கள் ஆசிரியர்கள்''

விழாவில் கடந்த ஆண்டு பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் கூடுதல் மதிப்பெண்கள் பெற்ற எட்டு மாணவ, மாணவிகளுக்குத் தங்கப் பதக்கங்களையும், வெள்ளிப் பதக்கங்களையும் கல்விஅமைச்சர் அவர்கள் வழங்கினார்.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் 19 பேர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

விழாவில், தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் கே. வேங்கடசுப்பிரமணியம், கல்வித் துறைச் செயலாளர் திரு செ. இராமதாஸ், சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு சுந்தரராஜ், முதன்மைக் கல்வி அலுவலர் திரு கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசினர்.

இரண்டாம் நாள் நடந்த நிகழ்ச்சிக்கு, தமிழக அரசின் இரண்டாம் செயலாளர் திரு. கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''ஆசிரியர்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும். ஆசிரியர்கள் பணியிலே சளைத்தவர்கள் அல்ல. இத்துறை அவர்களுக்கு மேலும் உற்சாகமாகப் படுத்த வேண்டும் என்றுதான், அகில இந்திய ரீதியில் இந்த விழா கொண்டாடப்படுகிறது'' என்றார்.

கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்த குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் பேசுகையில், ''புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் பெரும் பொறுப்பு ஆசிரியர்க்கு உண்டு. ஆசிரியர்கள் சமுதாயத்தின் முதுகெலும்பு போன்றவர்கள்'' என்றார்.

கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்கும், ஆசிரியர்களுக்கும் திருமதி பத்மா சொக்கலிங்கம் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி.கே. கரியாலி இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

இறுதியில், மாணவ மணிகளின் கலை நிகழ்ச்சிகள் கண்ணுக்கு மட்டுமல்ல; கருத்துக்கும் விருந்தூட்டுவனவாக இருந்தன பி.வி.ஜி.

## ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு தொலைக்காட்சி பெட்டிகளை வழங்க அரசு ஆணை

தமிழ்நாட்டில் தேர்தெடுக்கப்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு 50 தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தினை மத்திய அரசு ஏற்று அத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்குத் தேவையான தொகையை வழங்க ஒப்பளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 50 தொலைக்காட்சிப் பெட்டிகள் பெறுவதற்கு முன்பாக, தமிழக அரசு சென்னை நகரிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 5 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தொலைக்காட்சி வைப்பதற்காக ரூ. 25,000 ஒதுக்கியுள்ளது.




# பாண்டிய நாட்டில் பால் வளம்

மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 13.4.1979 அன்று தொடங்கப்பட்டது. முன்பு அங்கு இயங்கி வந்த மதுரை பால் பண்ணைத் திட்டம், 1.2.1981 முதல் தமிழ் நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் நிருவாகத்தில் இயங்கி வருகிறது.

மதுரை பால் பண்ணைத் திட்டத்தில் 1974ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்குச் சராசரி பால் உற்பத்தி 23,000 லிட்டராக இருந்தது. இப்பொழுது நாள் ஒன்றுக்குச் சராசரி பால் உற்பத்தி 1,23,000 லிட்டராக உள்ளது. இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் பால் உற்பத்தி உச்சகட்டமாக இருந்தது. அப்பொழுது நாள் ஒன்றுக்குப் பால் உற்பத்தி 1 இலட்சத்து 38 ஆயிரம் லிட்டராக இருந்தது.

இப்பொழுது மதுரை பால் பண்ணைக்கு 964 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 147 பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள் பால் வழங்கி வருகின்றன. இச் சங்கங்களில் 2,71,285 விவசாயிகளும், 11,000 பெண்களும், 15,892 ஆதிதிராவிடர்களும் உறுப்பினராக உள்ளனர்.

கடந்த ஆண்டில் 74 கூட்டுறவுச் சங்கங்கள் ஈரோடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கும், கோவை ஒன்றியத்திற்கும் மாற்றப்பட்டன.

மதுரை பால் பண்ணைக்கு 39 பாதைகளின் மூலம் பால் சேகரிக்கப்படுகிறது. இந்தப் பால் பழனி, திண்டுக்கல், தேனி, திருப்பத்தூர், பரமக்குடி, விருதுநகர், திருவில்லிப்புத்தூர், சங்கரன் கோயில், திருநெல்வேலி ஆகிய ஒன்பது இடங்களில் உள்ள பால் குளிரூட்டும் இடங்களில் சேகரித்து வைத்து விநியோகிக்கப்படுகிறது.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தால் இப்பகுதி விவசாயிகள் பெரும் பயனடைந்து வருகின்றனர்.

இரண்டாவது கட்டமாக, இப்பொழுது பால் பெருக்கத்திட்டத்தில் செய்யவிருக்கும் பணிகள் வருமாறு:

பால் பெருக்குத் திட்டம் 2ன் கீழ் மதுரை மாவட்டத்தின் 400 புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து நாளொன்றுக்கு 1 இலட்சத்து24 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படும். இதனால் 1 லட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயனடைவர். அதில் 80%க்கு மேல் சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் பிரிவைச் சார்ந்தவர்களாக இருப்பர்.

இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து கூடுதலாக நாளொன்றுக்குச் சுமார் 50 ஆயிரம் லிட்டர் பால் மதுரை மத்தியப் பண்ணைக்கு எடுப்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

பால் பெருக்குத் திட்டம் 2ன் கீழ் அதிகமாகச் சேகரிக்கப்படும் பாலினைக் கொள்முதல் செய்து பக்குவப்படுத்த மதுரை பால் பண்ணையினை ரூ. 402 லட்சம் செலவில் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை மத்திய பால் பண்ணை நாள் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ லட்சம் லிட்டர் கொள்முதல் திறனிலிருந்து $2\frac{1}{2}$ லட்சம் லிட்டர் கொள்முதல் திறனுள்ளதாக ரூ. 298 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்யப்படும்.

திண்டுக்கல் பால் குளிரூட்டும் நிலையத்தினை நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டரிலிருந்து 30,000 லிட்டருக்கும் தேனி பால் குளிரூட்டும் நிலையத்தினை நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 20,000 லிட்டருக்குக் குளிரூட்டவும் ரூ. 23 இலட்சம் செலவில் விரிவாக்கப்படும்.

மதுரையில் நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக் டன் திறன் கொண்ட கால்நடை தீவன தொழிற்சாலை ரூ. 81 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு உற்பத்தியினைப் பெருக்கிட வேண்டி தீவனப்பயிர் வளர்ப்பு, செயற்கை இனவிருத்தி மற்றும் கால்நடை நோய்த் தடுப்பு சிகிச்சை போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். மதுரை மாவட்டத்தில் தற்சமயமுள்ள 4 கால்நடை மருத்துவ வழித்தடங்கள் 17 கால்நடை மருத்துவவழித்தடங்களாகவும் 3 அவசரச் சிகிச்சைக் கால்நடை மருத்துவப்பிரிவு 9 அவசர கால்நடை மருத்துவப் பிரிவுகளாகவும் திட்டம் 2ன் கீழ் விரிவாக்கம் செய்யுப்படும்.

பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களில் கறவையினக் கால்நடைகளின் தரத்தினை உயர்த்தி பால் உற்பத்தியைப் பெருக்கிட உயரினப் பொலி காளைகளின் உறைவிந்து மூலம் செயற்கை இனவிருத்திப் பணி மேற்கொள்ளப்படும்.

—மாமூலன்

# அறிவுச் சுடர்



## மாணவர் பக்கம்

*காலையில் சூரியன் சிவப்பாகத் தோன்றுகிறது. மாலையில் சூரியன் மறையும்போதும் சிவப்பாகத் தோன்றுகிறதே. அது ஏன்?

காலையிலும் மாலையிலும் சூரியனின் கிரணங்கள்' பூமியில் அடிவானத்தில் அடர்த்தியான காற்று மண்டலத்தில் நெடுந்தூரம் நுழைந்து நம்மை வந்தடைகின்றன. இதனால் சூரிய வெளிச்சத்திலுள்ள ஏழு நிறங்களில் ஊதா, நீலம், பச்சை முதலியவற்றை இந்த நெடுந்தூரக் காற்று மண்டலம் கிரகித்து விடுவதால் சூரியன் செந்நிறமாகத் தெரிகிறது. சந்திரனும் இப்படித்தான் தெரியும். சூரியன் மிக உயரத்தில் இருக்கும்போது காற்று மண்டல உயரம் மிகக் குறைவு. அதனால் நிறமாற்றம் ஏற்படுவதில்லை.

*பூமியைப் போல் மற்றகிரகங்களிலும் இரவு பகல் தோன்றுமா?

பூமியைப்போல மற்ற கிரகங்களிலும் இரவு பகல் உள்ளன. இந்தக் கிரகங்கள் அதனதன் அச்சில் வெவ்வேறு வேகத்தில் சுழன்று கொண்டிருப்பதால் அதற்கேற்ப இரவு பகல் நேரங்கள் மாறுபடுகின்றன. உதாரணமாக, மிகப் பெரிய வியாழன் கிரகம் 9 மணி 55 நிமிடங்களில் ஒரு சுற்று சுற்றுகிறது. சனிக்கிரகம் 10 மணி 14 நிமிடங்களில் சுற்றுகிறது. இதனால் அங்கே இரவு பகல் குறுகிய நேரங்களில் மாறி மாறி ஏற்படுகின்றன. செவ்வாய் கிரகத்தில், சுமாராக பூமியைப் போல் 24 மணி 37 நிமிடங்களில் இரவு பகல் ஏற்படுகிறது.

*வைட்டமின் 'டி' மாலை வெய்யிலில் மட்டும்தான் உண்டா? காலை வெய்யிலில் இல்லையா?

வைட்டமின் 'டி' வெய்யிலில் இல்லை. நமது உடலில் Sterol என்ற உயிர்வேதியல் பொருள்கள் நமது உடலில் திசுக்களில் உள்ளன. சூரிய வெளிச்சம் இந்த Sterol மூலக்கூறில் படும்போது இவை மாற்றமடைந்து வைட்டமின் 'டி' யாக மாறுபடுகிறது. சூரிய வெளிச்சத்திலுள்ள Ultra-Violet என்ற கதிர் இம்மாற்றத்திற்குத் தேவையானது. அது மாலை வெய்யிலில் அதிகமாக இருக்கிறது.

*மருதாணி இலையைஅரைத்து நகங்களுக்குத் தடவினால் நகங்கள் சிவப்பாக மாறுவது ஏன்?

மருதாணி இலையில் ஒரு Pigments (வண்ணப் பொருள்) இருக்கிறது. இந்தச் சாயப் பொரஸ் (Dye) நீரில் கரைந்திருக்கும். இது புரதங்களோடு சேர்ந்து சிவப்பு நிறமாக மாறுகிறது. மருதாணி இலையை அரைத்து, நகங்களிலோ, உள்ளங் கைகளிலோ வைத்தால், அவ்வுறுப்புக்களிலுள்ள புரதங்களுடன் இந்த Dye சாயப் பொருள் இணைந்து புரதத்தைச் சிவப்பாகச் செய்கிறது. நகத்திலுள்ள Keratin என்ற புரதத்துடன் இணைந்த இந்தச் சாயப்பொருள் நீரில் கரையும் தன்மையை இழக்கிறது. அதனால் இந்த நிறம் கைகழுவினாலும்போகாமல் நிலைக்கிறது.

*வைரஸ் என்பது என்ன? அதற்கு உயிர் உள்ளதா? இதனால் ஏற்படக்கூடிய நோய்கள் என்னென்ன?

வைரஸ் என்பது ஒரு சிறப்பான உயிரினம். மிகமிகச் சிறிய இவை, தானாக உயிர்வாழ இனத்தைப் பெருக்க சக்தியில்லாதவை. ஆனால் உயிரினங்களில் செல்களில் ஊடுருவிச் சென்று, அவைகளின் சக்தியில் தன்னினத்தை, நொடிப் பொழுதில் பல்லாயிரக் கணக்காகப் பெருக்கக்கூடிய வல்லமை படைத்தது. வைரஸ்கள் எல்லாமே 'பாரஸைட்டுகள்' மற்றொரு உயிரினத்தைத் துன்பப்படுத்தி தன்னினத்தைப் பெருக்கிக் கொள்பவை. வைரஸ்களுக்கு உயிர் இருக்கிறது. ஆனால் வளர்வதற்கு மற்றொரு உயிரினம் தேவை.

வைரஸ்கள் பல்வேறு நோய்களை உருவாக்குகின்றன. உதாரணமாக அம்மை, இன்புளுயன்ஸா, மஞ்சள்காமாலை முதலியன.

*நாம் உண்ணும் உணவில் உள்ள கற்கள், நாம் உணவு உண்டபின், சிறுநீர்க் குழாயில் வந்து அடைத்துக் கொள்வதாகக் கூறுகிறார்களே, இது ஏன்?

நாம் உண்ணும் உணவில் உள்ள கற்கள் வயிறு, சிறுகுடல் பெருங்குடலைக் கடந்து மலத்தின் மூலம் வெளியேற்றப்படுகின்றன. சிறுநீர்க்குழாயில் கற்கள் வேறு காரணங்களால் உண்டாகிறது. அவை உடலிலேயே உருவாகும் கற்களாகும். பலவிதமான உப்புச் சத்துக்கள் கரையாமல் உறைந்துவிடுவதால், இந்தக் கற்கள் உருவாகின்றன.

—நன்றி : 'வானொலி'

### தொலைக் காட்சியில் கடிகாரம்

உலகிலேயே முதல் முறையாக ஜப்பானிய நிறுவனம் ஒன்று தொலைக்காட்சி (television) யுடன் கூடிய கைக்கடிகாரத்தைத் தயாரித்துள்ளது!

இந்தத் தொலைக்காட்சியின் திரை விட்டம் 3 செ. மீ. இதில் நேரத்தையும் பார்த்துக் கொள்ளலாம்; அல்லது நிகழ்ச்சிகளையும் பார்த்துக் கொள்ளலாம். இது வண்ணத் (colour) தொலைக்காட்சி அல்ல. கறுப்பு வெள்ளைதான்.

கடிகாரத்தில் தொலைக்காட்சி இயங்க தனி மின்கலம் தரப்படும். இது ஒரு சிறிய 'பர்ஸ்' அளவுதான் இருக்கும். இதில் இருந்து ''ஹெட்-போர்ன்'' மூலமாக நிகழ்ச்சிகளைக் கேட்க முடியும்.

இந்தக் கடிகாரத்தில் சாதாரண பெரிய தொலைக்காட்சிகளில் உள்ளதுபோல் ''காதோட்ரேட்யூப்'' அல்லது ''தொலைக் காட்சிட்யூப்'' இருக்காது.

அதற்குப் பதிலாக ''லிக்விட் கிரிஸ்டல் டிஸ்பிளே'' அல்லது ''எல். சி. டி'' என்று அழைக்கப்படும் அமைப்புத்தான் இருக்கும்.

அடுத்த ஆண்டில் இந்தத் தொலைக்காட்சி விற்பனைக்கு வரும். விலை 400 டாலர்தான் (அதாவது ரூ. 3800) என இந்தத் தொலைக் காட்சி தயாரிக்க இருக்கும் ஜப்பான் கடிகார நிறுவனம் தெரிவித்துள்ளது.



## விளையும் பயிர்

பள்ளிப் பருவத்திலேயே பல மாணவர்கள், படிப்பில் மட்டு மல்லாது, பல கலைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

அந்த வகையில், பூண்டி புஷ்பம் கல்லூரியில், முதலாம் ஆண்டு வரலாறு படிக்கும் மாணவர் த. குணசேகரன் கவிதைகள் படைப்பதில் சிறந்து விளங்குகிறார்.

இதுவரை சுமார் 250 கவிதை கள் எழுதியுள்ள இம் மாணவர், கவியரங்குகளிலும் பங்கு பெற் றுள்ளார். இவையன்றிக் கதை, கட்டுரைப் போட்டிகளிலும் வெற்றி பெற்றுப் பரிசுகள் பெற் றுள்ளார். இவர் கையெழுத்துப் பத்திரிகை ஒன்றையும் நடத்தி வருகின்றார்.

## ஒலிம்பிக்கின் கதை

சீயசு (Ezus) என்னும் கிரேக்கத் தலைமைத் தெய்வத்திற்காக ஒலிம்பிய சமவெளியில் இவ் விளையாட்டு கி. மு. 776-ல் நிகழ்ந்தது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நான்குநாள் விழாவாக இக்கொண்டாட்டம் நடைபெற் றது. முதல் நாளன்று தேவ தைக்குப் பலியிட்டு வழிபாடு நடத்துவர். அடுத்த மூன்று நாட்களும் மற்போர், குத்துச் சண்டை, தேரோட்டம், ஆளோட் டம் எனப் பல்வேறு போட்டிகள் நிகழும். வெற்றி பெறும் வீர ருக்கு ''ஆலிவ்'' பூங்கொத்தினைத் தலையில் சூட்டி வாழ்த்துப் பாடிப் போற்றுவது பண்டைய மரபு. மூன்று போட்டிகளில் ஒரு சேர வெற்றி பெற்றோர்களு டைய திரு உருவங்கள் சிலை வடிக்கப்படும். இவ்விழாவினை உரோமப் பேரரசர் டியோட்டோ என்பவர் கி. பி. 394-ல் நிறுத்தி விட்டார்.

**தற்கால ஒலிம்பிக்:**

[illegible]தாழ 1,500 ஆண்டு களுக்குப் பின் கி. பி. 1894-ல் பிரெஞ்சுப் பெருமகன் பாரன் பீயர் தே-கூப்பர்தின் (Parren Piere De-Coopertin) என்பவ ரின் பெருமுயற்சியால் ஒரு விளை யாட்டுக் குழு அமைக்கப்பட்டது.

தற்கால ஒலிம்பிக் 1896-ல் ''ஏதன்ஸ்'' மாநகரில் முதன் முதலாக நடத்தப்பட்டது.

**சின்னங்கள்:**

1920 ஆம் ஆண்டு, வார்ப்பில் நடந்த விழாவில் 'விழாச்சின்னம்' உருவாயிற்று. 'ஐந்து கண்டங் களையும் குறிக்கும் வகையில் வெண்ணிறக் கோட்டின் நடுவே கறுப்பு, சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை எனும் ஐந்து வளை யங்கள் சங்கிலித் தொடர்போல் அமைந்துள்ளன.

''விரைவு, உயர்வு, வலிமை இம் மூன்று சொற்களும் ஒலிம் பிக்கின் விருதுச் சொற்கள்.

—என்.எம்.கே. முகம்மது பிலால்,
மேல் நிலை முதலாண்டு,
முஸ்லீம் மேல் நிலைப்பள்ளி
அபிராமம்.

## காலங்கள்

கண்ணன் வந்தான்
கடைக்குப் போனான்
பொன்னா இதுதான்
இறந்த காலம்.

பாமா வருகிறாள்
பரதம் ஆடுகிறாள்
பொன்னி இதுதான்
நிகழும் காலம்.

நாளை நாமும்
நாட்டை உயர்த்துவோம்!
பொன்னா, பொன்னி
புரியுதா எதிர்காலம்!

— நாகை மனோகரன்.




அன்று நீதி போதனை வகுப்பு. மாணவர்கள் ஆர்வத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தனர். ஆசிரியர் கதை சொல்லத் தொடங்கினார்.

ஒரு மரத்தில் காக்கை உட்கார்ந்திருந்தது. அதன் பக்கத்தில் இன்னொரு காக்கை வந்து அமர்ந்தது. முதல் காக்கை ஒன்றும் பேசவில்லை. இரண்டாவது காக்கை சிறிது பொறுத்துப் பார்த்தது. ஒன்றும் பயனில்லை. பிறகு தானே பேசத் தொடங்கியது.

''நண்பா, ஏன் இப்படி வாட்டமாக இருக்கிறாய்? ஒன்றும் பேசாமல் இருக்கிறாயே? ஏதாவது கோபமா?'' என்று கேட்டது. அப்போதும் முதல் காக்கை பேசாமல் இருந்தது.

''இப்படி இருந்தால் எப்படி? உன் மனத்தில் என்னதான் இருக்கிறது?'' என்று விடாமல் கேட்டது இரண்டாம் காக்கை.

முதல் காக்கை சொல்லியது, ''காக்கையாகப் பிறந்து ஏதாவது பெருமை கண்டோமா? புகழ் கண்டோமா? இல்லை, மகிழ்ச்சி தான் கண்டோமா?''

''ஏன் இப்படிச் சொல்லுகிறாய்?'' என்று புரிபடாமல் கேட்டது இரண்டாம் காக்கை.

''அந்த மாந்தோப்பில் இருக்கிற குயிலைப் பார்! அதன் குரல் எவ்வளவு இனிமையாக இருக்கிறது! அதோ அந்தப் பச்சைக் கிளியைப் பார்! எத்தனை அழகாக இருக்கிறது! நாமும் இருக்கிறோமே கொஞ்சமாவது அழகு உண்டா? இனிமை உண்டா?''

''வருந்தாதே நண்பா, இந்த ஊருக்குக் கோடியில் ஒரு மலை இருக்கிறது. அங்கே ஒரு முனிவர் இருக்கிறார். அவர் கேட்பதை எல்லாம் கொடுக்கும் ஆற்றல் உடையவராம். ஊர் மக்கள் பேசிக் கொள்கிறார்கள். நீ அவரிடம் சென்று கேட்டுப் பாரேன்!''

''நல்ல யோசனை சொன்னாய். நான் இப்போதே போய்க் கேட்கிறேன்!'' என்று பறந்து போனது முதல் காக்கை. என்னதான் நடக்கிறது பார்க்கலாமே என்று பின்னாலேயே பறந்து சென்றது இரண்டாம் காக்கை.

முதல் காக்கை பறந்து சென்று முனிவரின் காலடியில் விழுந்தது. முனிவர் அதை அன்புடன் எடுத்தார். ''உனக்கு என்ன குறை?'' என்று கேட்டார். காக்கை தன் குறையைச் சொல்லியது. சொல்லும் போதே கண்ணீர் விட்டது.

முனிவர் அதைப் பார்த்து மிகவும் இரக்கப்பட்டார். அதன் கண்ணீரைத் துடைத்தார். ''உனக்குக் குயிலைப் போன்ற குரல் வேண்டும்; கிளியைப் போன்ற அழகு வேண்டும்; அவ்வளவுதானே?'' என்று கேட்டார்.

'ஆமாம்' என்று தலையசைத்தது காக்கை. ''முதலில் உனக்குக் குயிலைப் போன்ற குரல் கொடுக்கிறேன்! உன் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கிறதா என்று பார்! அதன் பிறகு என்னிடம் வா! தேவையானால் கிளியைப்போன்ற அழகைத் தருகிறேன்'' என்றார்.

உடனே காக்கை முனிவரின் காலில் விழுந்து வணங்கியது. முனிவர் அருள் புரிந்தார். காக்கைக்குக் குயில் போன்ற குரல் வந்தது. காக்கை குயிலைப் போலக் கூவிக் கூவி மகிழ்ந்தது. முனிவர் அதை வாழ்த்தி அனுப்பினார்.

நடந்ததை எல்லாம் இரண்டாம் காக்கை ஒளிந்திருந்து பார்த்தது. பறந்துபோய் எல்லாக் காக்கைகளுக்கும் சொல்லிவிட்டது. எல்லாக் காக்கைகளும் திரண்டு வந்துவிட்டன. குயில் குரல் பெற்ற காக்கையை வியப்புடன் பார்த்தன.

''உன் குயில் குரலில் ஒரு பாட்டுப் பாடு'' என்று எல்லாக் காக்கைகளும் கேட்டன. ''உங்கள் முன்னால் நான் எதற்காகப் பாட வேண்டும்?'' என்று ஆணவத்துடன் கேட்டது குயில் குரல் பெற்ற காக்கை.

''எங்கள் மகிழ்ச்சிக்காக ஒரு முறை பாடு'' என்று கேட்டன.

''பாட முடியாது போங்கள்!'' என்று சொல்லி விட்டு வேகமாகத் தன் பொந்துக்குள் போய் புகுந்து கொண்டது. காக்கைகள் காத்துக் காத்துப் பார்த்துவிட்டு வருத்தமாகத் திரும்பின.

குயில்குரல்பெற்றகாக்கைஅன்று முதல் தன் இனத்தோடு சேருவதில்லை. தனியே இருந்து வந்தது அதன் மனத்திலே ஒரு பூரிப்பு. தன் இனத்திலேயே தான்தான் உயர்வு என்று எண்ணத் தொடங்கியது.

அடிக்கடி குயில்கள் இருக்கும் மாந்தோப்புப் பக்கம் சென்றது. குயிலின் பக்கத்தில் போய் அமர்ந்தது. எந்தக் குயிலும் அதைத் திரும்பிப் பார்க்கவில்லை.

ஒரு நாள் மீண்டும் முனிவரைத் தேடிச் சென்றது. தனக்குக் கிளியைப் போன்ற அழகு வேண்டும் என்று கேட்டது. ''குயில் குரலால் நீ மகிழ்ச்சி கண்டாயா?' என்று கேட்டார் முனிவர். ''ஆமாம்'' என்றது காக்கை.

''அப்படியானால் கிளியைப் போன்ற அழகையும் உனக்குக் கொடுத்தேன்!'' என்றார். காக்கையின் கருமை நிறம் மாறியது. அழகிய பச்சை நிறம் வந்தது. முனிவருக்கு நன்றி சொல்லிவிட்டு மகிழ்ச்சியுடன் பறந்தது.

அதைப் பார்த்த பிற காக்கைகள் மிகவும் வியந்தன. எல்லாக் காக்கைகளுக்கும் சென்று கூறின. காக்கை இனம் முழுவதும் திரண்டு வந்தது. அழகு பெற்ற காக்கை ஓடிப் போய் பொந்துக்குள் புகுந்து கொண்டது.

''வெளியே வா! உன் அழகை எங்களுக்குக் காட்டு'' என்று காக்கைகள் கத்தின.

''என் அழகை உங்களுக்குக் காட்டினால் என் மதிப்புக் குறைந்துவிடும்! முடியாது போங்கள்!' என்று சொல்லிவிட்டது. எல்லாக் காக்கைகளும் வருந்தியபடியே திரும்பின.

அழகு பெற்ற காக்கை அன்று முதல் வெளியே வருவதில்லை. தன் அழகை எவரும் பார்க்கக் கூடாது என்று கருதியது. இரை தேடவும் வருவதில்லை. எத்தனை நாள் இப்படி இருக்க முடியும்? ஒரு நாள் பசியால் மயங்கி விழுந்தது. அதன் உயிரும் பிரிந்தது.

நல்ல அறிவில்லாத ஒருவனுக்குச் செல்வங்கள் வந்தாலும் அவனால் நன்மை பெற முடியாது. மற்றவர்களுக்கும் மகிழ்ச்சி தர முடியாது. ஆணவம் அவனைக் கெடுத்துவிடும்.!

அவன் அறியாமையே அவனை அழித்துவிடும். அறிவில்லாதவனைப் பிறர் அழிக்க வேண்டியதில்லை. அவனை அவனே அழித்துக் கொள்வான் என்று கதையை முடித்தார் ஆசிரியர்.

— ஆலந்தூர்

கோ. மோகனரங்கன்




# திருவேற்காட்டில் புதிய குடில்கள்

சென்னை அருகிலுள்ள திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோவிலில் ரூ. 8 இலட்சம் செலவில், பக்தர்கள் தங்குவதற்காகக்கட்டப்பட்டுள்ள 36 விடுதிகளையும் ரூ. 1.5 இலட்சம் செலவில் மூன்றாம்பிரகாரம் திருமதிலையும் ரூ. 9.60 இலட்சம் செலவில் ஆலயப் பணியாளர் குடியிருப்புக்குக் கால்கோள்விழாவும் சீரோடும் சிறப்போடும் 9.9.82 அன்று நடைபெற்றன.

விழாவையொட்டி திருவேற்காடு விழாக்கோலம் பூண்டு இருந்தது. அலங்கரிக்கப்பட்ட கோயில் யானை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களுக்கு மாலை அணிவித்தது. அறங்காவலர் குழுத் தலைவர் திரு இரா. சர்வேசுவரராவ், கோவில் உதவி ஆணையர் திரு. சு. பாலசுப்பிரமணியன் ஆகியோரும் அமைச்சருக்கு மாலைகள் அணிவித்தனர்.

மாண்புமிகு மேலவைத்தலைவர் டாக்டர். ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தமது உரையில்:—

''தமிழகத்தின் இந்து அறநிலையத் துறையை மிகத் திறமையாக நிர்வகித்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது. அத்துற

''தமிழகத்தின் கோவில்களில் உள்ள அறங்காவலர்களின் நடவடிக்கையினால்தான் அரசுக்கு நல்ல பெயர் கிடைக்க முடியும். அதனை ஒவ்வொரு அறங்காவலர்களும் கடைப்பிடிக்க வேண்டும். பக்தர்களுக்கு இல்லம் கட்டுவதன் மூலம், கோவிலுக்கு வரும் பக்தர்கள் மன நிறைவோடு தங்கும் அளவுக்குப்பண்புடனும் அடக்கத்துடனும் கோவில் நிர்வாகிகளும், பணியாளர்களும், ஊழியர்களும் நடந்து கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு புதுடெல்லியிலுள்ள தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு இரா. மோகனரங்கம் அவர்கள் அறநிலையத் துறை ஆணையர் திரு ஆர். சண்முக சிகாமணி அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு ஜே.சி.டி. பிரபாகரன் அவர்கள், அறங்காவலர் குழுத்தலைவர் திரு. இரா. சர்வேசுவரராவ் அவர்கள், மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு வி. என். சிதம்பரம் அவர்கள், திரு வித்வான் லட்சுமணன் அவர்கள் ஆகியோர் உரையாற்றினார்கள்.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் தமது உரையில்:—

''மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. முடிவு பெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்று முதல்வர் ஆணையிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையில் பாதியில் நின்ற திட்டங்கள் கூட இந்த ஆட்சியில் எடுத்து நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு ஆலயத்தில் நிதிப் பற்றாக்குறை என்றால் வருமானம் கூடுதலாக உள்ள ஆலயத்தில் இருந்து உதவி செய்து வருகிறோம்''.

''மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு கோவில்களின் வருமானம் உயர்ந்து கொண்டு வருகிறது. இது பக்தர்கள் கோவிலுக்கு அதிகமான அளவில் வருவதையே காட்டுகிறது. இந்த கருமாரியம்மன் கோவிலை எடுத்துக்கொண்டால் கூட 10 ஆண்டுகளுக்கு முன் ரூ. 4 இலட்சத்து 25 ஆயிரத்து 128. இந்தக் கோவிலில் மட்டும் 93 இலட்சத்தைச் சேமித்து வைத்திருக்கிறோம்.

''புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழகக் கோவில்களில் மொத்தம் சேமிப்பு ரூ. 4 கோடியாக இருந்ததைக் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 18 கோடியாக உயர்த்தி இருக்கிறோம். இது தமிழக அறநிலையத் துறை வரலாற்றில் ஒரு மகத்தான மாறுதலையே காட்டுகிறது.

''நடமாடும் தெய்வமாக நம்மிடையே உலா வந்துகொண்டிருக்கிறார் பெரியவர் ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள். 87 வயதிலும் நடந்தே எல்லா இடத்திற்கும் செல்லுகிறார். காஞ்சி பெரியவர் ஒரு துறவிக்குரிய இலக்கணத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். மற்றவர்கள் செய்ய முன்வராத காரியத்தைத் தமது இலட்சியமாகக் கொண்டு பெரியவர் செய்து வருகிறார். அவரிடம் ஆண்டவனுக்குச் சமமான உணர்வை நம்மால் பார்க்க முடிகிறது. காஞ்சிப் பெரியவரைத் தவிர வேறு யாரையும் காணவில்லை.

''சமுதாயத்திற்காக-நாட்டிற்காக - வழிகாட்டும் தலைவர்களுக்காக நன்றியுடன் காரியத்தை ஆற்றவேண்டும். புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலம் பொற்காலம். வள்ளுவரின் இலக்கணத்திற்கும் இலக்கியமாக வாழ்ந்து கொண்டிருப்பவர் நமது புரட்சித் தலைவர்'' என்று குறிப்பிட்டார்.

அறங்காவலர் குழு உறுப்பினர் புலவர் வேதா நன்றிநவில விழா இனிதே முடிந்தது!

—நிகழ்ச்சிதொகுப்பு:

**—ஆனந்தன்**

# சென்னை மக்களுக்கு குடிநீர் கிடைக்க தமிழ்நாடு அரசு மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தின் திறன்மிகு ஆக்கப் பணிகள்!

**கடந்த இரண்டாண்டு சேர்ந்தாற்போல் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் சென்னை நகருக்கு நீர்வழங்கும் நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு குறைந்துள்ளது. எனவே தமிழ்நாடு அரசும், குடிநீர் வாரியமும் சென்னை நகருக்கு தற்போது வழங்கப்படும் குடிநீர் அளவையே தொடர்ந்து தினசரி வழங்க கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.**

- சென்னை நகர் குடிநீர் விநியோகத்திற்காக சோழவரம் மற்றும் செங்குன்றம் ஏரிகளில் உள்ள நீரைக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- தாமரைப்பாக்கம், பஞ்சட்டி பகுதியிலுள்ள நிலத்தடி நீரை சென்னைக்குக் கொண்டுவர மேலும் பல ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.
- சென்னை நகரில் 5300க்கும் மேற்பட்ட குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.
- நாள்தோறும் 470 நீர்த்தொட்டிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.
- 435 திறந்த பொதுக் கிணறுகள் தூர் வாரப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.
- குடிநீர் தேவையான அளவு கிடைப்பதற்காக மேலும் குழாய்க் கிணறுகள் நிறுவுதலும் நீர்த்தொட்டிகள் அமைத்தலும் தொடர்கின்றன.

---

**குழாய் நீரை குடிப்பதற்கும் சமையலுக்கும் மட்டுமே பயன்படுத்துங்கள்**
**மற்ற தேவைகளுக்கு கிணற்று நீரை உபயோகியுங்கள்.**
**அரசு மற்றும் குடிநீர் வாரியத்திற்கு ஒத்துழைப்பு தாருங்கள்.**

---



பொதுமக்களின் குடிநீர் தேவைக்கான ஆழ்கிணறு கைப்பம்புகள்



சோழவரம் ஏரிநீரை பம்புசெட் மூலம் சென்னைக்கு கொண்டுவருதல்




நீர்த்தொட்டிகளுக்கு லாரிகள் மூலம் நீர் நிரப்புதல்



நிலத்தடி நீரை வெளியே கொண்டுவர ஆழ்துளைக் கிணறுகள்

DIPR

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி
தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

# செந்தமிழ் பெற்ற சீனம்



உலகத்துப் பழந்தமிழ் நாகரிகங்களுள் சிறப்பிடம் பெறும் இரு பெரு நாகரிகங்கள் சீனமும் செந்தமிழும். இவ்விரு நாகரிகங்களின் இயல்புகளையும் ஒப்பிட்டு ஆராய்தல் பெரும் பயன் தரும். இவ்வாறே சப்பானிய நாகரிகத்தையும் செந்தமிழ் நாகரிகத்தையும் ஒப்பிட்டு ஆராய்தல் தகும்—சிறப்பாக வடக்கிருத்தல்—ஹரிகரி—போன்ற மரபுகள் பற்றி.

இச்சிறு குறிப்பில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியில் பெரிதும் இடம் பெற்றுள்ள சீனத் தொடர்பான சொற்களைப் பார்ப்போம்.



| | | | |
|---|---|---|---|
| 1. | சீனக் கண்ணாடி | — | 1. சீன தேசத்து முகம் பார்க்கும் கண்ணாடி. 2. மூக்குக் கண்ணாடி. |
| 1. | அ. சீனக் களிமண் | — | முதன் முதல் பீங்கான் செய்யஉதவிய சீனமண். |
| 2. | சீனக் கர்ப்பூரம் | — | சீனச் சூடம்/ன் |
| 3. | சீனக் காக்கை | — | காக்கை வகை |
| 4. | சீனக் காரம் | — | படி காரம் (Alum) |
| 5. | சீனக் கிழங்கு | — | ஓர் இமாலயச் செடிவகை |
| 6. | சீனக் கிளி | — | பெருங்கிளி (Cockatoo) |
| 7. | சீனக் குடை | — | கடுதாசிக் குடை |
| 8. | சீனக் கொழுஞ்சி | — | கத்தூரி எலுமிச்சை (எலுமிச்சை வகை—Limeberry ) |
| 9. | சீனகர் | — | சீன தேசத்தார். |
| 10. | சீனச்சட்டி | — | ஒருவகை உருக்கு இரும்பு |
| 11. | சீனச் சரப்பள்ளி | — | அணிவகை |
| 12. | சீனச்சூடன் | — | கருப்பூர வகை சீனச் சூடனென்று பெயர்............ கூறப்பட்ட (சிலப். 14,109, உரை) |
| 13. | சீனாட்டம் | — | குருவி வகை (Goat sucker) |
| 14. | சீனட்டி | — | நெல்வகை |
| 15. | சீனத்து முத்து | — | சீன தேசத்து ஒரு வகைப் போலி முத்து |
| 16. | சீனத்துப் பட்டு | — | சீனதேசத்துப் பட்டு |
| 17. | சீனத்து வித்தை | — | அருமைப்பாடான வேலை. |
| 18. | சீனநெல் | — | நெல்வகை |
| 19. | சீனப்பட்டை | — | பறங்கிப் பட்டை (China root) அல்லது பறங்கிச் சக்கை ஒருவகைக் கொடி/மரம் |

| | | | |
|---|---|---|---|
| 20. | சீனப் புரணி | — | பெரிய சாடி வகை |
| 21. | சீனப் பலா | — | சீனப்பட்டை/பறங்கிப்பட்டை |
| 22. | சீனப் பா | — | பறங்கிப்பட்டை[பெருங்கிழங்கு] பெருமருந்து (கொடி வகை) |
| 23. | சீனப்பாகு | — | மருந்துவகை |
| 23. | அ சீனப்பீங்கான் | — | சீனக்களிமண்ணில் செய்த பாத்திரம், பொம்மை. |
| 24. | சீனப் பூ | — | மர வகை |
| 25. | சீனப்பூண்டு | — | மருந்துப் பூண்டு வகை |
| 25அ. | சீனப் பொம்மை | — | சீனக் களிமண்ணில் செய்த உரு |
| 26. | சீனம் | — | 1. ஒரு நாடு (நன்னூல் 273, உரை) 2. சீனமொழி, 3. சீனத்துச் சரக்கு (இப்பட்டுச் சீனம் (நன், 290, விருத்) 4. படி காரம் (Alum) (கம்ப தைலம். 91). |
| 27. | சீன மல்லிகை | — | மல்லிகை வகை |
| 28. | சீன மிளகு | — | வால்மிளகு—(கொடி வகை) |
| 29. | சீனமுத்து | — | சீனத்து முத்து |
| 30. | சீனமுட்செல்வநிதி | — | முட்செவ்வந்தீ வகை |
| 31. | சீனர் | — | சீனகர் (யவனர் சீனர் சோனகர் (கம்பராமாயணம் மிதிலை 99) |
| 32. | சீனன் | — | பௌத்தன் |
| 33. | சீனவங்கம் | — | ஈயம் |
| 34. | சீன வெடி | — | பட்டாசு |
| 35. | சீன வரி வண்டு | — | நச்சுத்தன்மை உள்ள ஒரு வண்டு வகை |
| 36. | சீனன் | — | சீன தேசத்தான் |
| 37. | சீனா | — | சீன நாடு |
| 38. | சீனக் கற்கண்டு | — | கற்கண்டு வகை |
| 39. | சீனக் காகிதம் | — | காகித வகை |

| | | |
|---|---|---|
| 40. | சீனக் கோழி | — கோழிவகை |
| 41. | சீனாச் சுருள் | — சீனாப் பட்டு |
| 42. | சீனாத் தொப்பி | — தொப்பி வகை (புதுவை வழக்கு) |
| 43. | சீனாப் பிரேதம் | — மிகமெலிந்தவன் |
| 44. | சீனாப் பெட்டி | — பெட்டி வடிவான வாணம் (பட்டாசு வகை) |
| 44.அ | சீனாப் பொம்மை | — சீனாவிலிருந்து வரும் பொம்மை. அழகான பெண்/குழந்தை |
| 45. | சீனி | — 1. சீனிச் சர்க்கரை, 2. சீனிக்காரம், சீனத்துப்பொருள் 3. மரவகை, 4. சாத்துக்குடி. |
| 46. | சீனிக்கயிறு | — மரநங்கூரக் கயிறு |
| 47. | சீனிக் கற்கண்டு | — சீனக் கற்கண்டு |
| 48. | சீனிக்காரம் | — சீனக்காரம் |
| 49. | சீனிக் கிழங்கு | — சர்க்கரை வள்ளிக்கிழங்கு |
| 50. | சீனிச் சக்கர் | — சீனிச்சக்கரைச் சுவையுள்ள மாம்பழ வகை |
| 51. | சீனிச்சட்டி | — வறுத்தற்குரிய இருப்புச்சட்டி |
| 52. | சீனிச் சர்க்கரை | — வெண்மையான சர்க்கரை வகை |
| 53. | சீனிப் பாய் | — பாய் வகை |
| 54. | சீனிப் பலா | — மரவகை |
| 55. | சீனி மிட்டாய் | — மிட்டாய் வகை |
| 56. | சீனி மிளகாய் | — மிளகாய் வகை |
| 57. | சீனி யதிரசம் | — ஒருவகைப் பண்ணீகாரம் |
| 58. | சீனியவரை | — கொத்தவரை (செடி வகை) |
| 59. | சீனி வெடி | — சீனவெடி |
| 60. | சைனக் கோழி | — அடை காக்காமல் முட்டை பொரிக்குஞ் சீனக் கோழி. |

அரை நூற்றுக்கும் மேற்பட்ட மேற்கண்ட சொற்கள் செந்தமிழ் மக்கள் நெஞ்சில் சீனா பெற்றிருந்த இடத்தை விளக்கும். இந்த அளவுக்கு வேறெந்த நாட்டின் பெயரிலும் தொடர்புடைய தமிழ்ச் சொற்கள் இல்லை என்பதும் இங்கு எண்ணத்தக்கது. 'சீனம்' சிறப்பாகச் சர்க்கரைக்கும், பட்டுக்கும், பட்டாசுக்கும் பேர் பெற்றிருந்தது. ஆனால் தமிழக மரவகை (Flora) மாவகை (Fauna) உலகத்திலும் சீனம் பெற்றுள்ள செல்வாக்கு வியத்தற்குரியது. சீனம் பற்றிய கருத்தும் கற்பனையும் தமிழகத்தில் 12ஆம் நூற்றாண்டளவிலேயே வேரூன்றி விட்டது.

# ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு – புதிய முறை



தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழ் உள்ள இரசாயனக் கூடத்தில் ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்கும் வழி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. இதன்படி இதுகாறும் ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பதை விட எளிமையாகவும் குறைந்த விலையிலும் செய்யும் முறையாக இது அமைகிறது.

இதுகாறும் ஓலைச்சுவடிகளைப் பிரஷ் கொண்டு துடைத்து, அதன் மீது லெமன் கிராஸ் எண்ணெய் பூசப்பட்டு பூச்சிகள் அரிக்காமல் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால், இப்போது கண்டுபிடித்துள்ள முறையில் மேல் எழுந்த வாரியாக எண்ணெய் பூசப்படுவதோடு, தெளிக்கப்பட்டு வளைந்து கொடுக்கும் வகையில் மாற்றப்பட்டு கையினால் எடுத்துப் படிப்பதற்கும், பல ஆண்டுகள் வைத்துப் பாதுகாப்பதற்கும் இந்தப் புதிய முறை பயன்படும்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள முறையின் படிஒன்றோடொன்று ஒட்டியுள்ள சுவடிக் கட்டுகளைத் தூய்மையான தண்ணீரில் அம்மோனியாவுடன் கலந்து சுமார் 30 நிமிடம் ஊற வைத்துப் பிறகு ஓலைகளை ஒவ்வொன்றாகப் பிரித்து எடுக்க வேண்டும். பிறகு ஓலைகளைச் சுத்தமாக துடைத்து விட்டு அதனுடைய பழுப்புகள் போக்குவதற்கும், அழுக்குகளை அகற்றுவதற்கும் முதலில் கிளிசரால் நீர்க் கலவை (1:1) பின்பு சோப்புஎண்ணெயுடன் கலந்து நீரில் போதிய நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு இந்த ஓலைகளை தேவையான உஷ்ண அளவில் மிகவும் கவனத்துடன் உலர்த்த வேண்டும். அதன் பிறகு 'பாலி எதிலின் கிளைகால்'வுடன் பூச்சிக் கொல்லி கலந்து நீரில் போதிய நேரம் நனைத்து வைத்திருக்கவேண்டும். அதன் பிறகு ஓலைகளை எடுத்துப் பயன்படுத்தலாம். இதனால் ஓலைகள் வளைவதற்கும், ஓலைகளின் திண்மை கெடாமலும், படிப்பதற்கு, எளிமையாகவும், பூச்சி அரிக்காமல் இருப்பதற்கும் மிகவும் எளிதாக அமைகிறது. இதன் பயனாய் இப்போது செலவிடும் தொகையைவிட, குறைவான தொகையில், எளிய முறையில் பாதுகாக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையில் பண்டைக் கலைப் பொருட்களையும், ஓலைச் சுவடிகளையும், ஓவியங்களையும் பிற பொருட்களையும் பாதுகாப்பதற்காக அமைத்துள்ள இரசாயனக் கூடத்தில் இந்த முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தென்னாட்டில் பெரும்பாலான இலக்கியங்கள், மருத்துவச் சுவடிகள், பிற சமய நூல்கள் அனைத்தும் ஓலைச்சுவடியிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பாதுகாப்பது மிகவும் கடினமாக உள்ளது. இதனால் இந்தப் புதிய முறை பின்னர் வரும் நூலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் மிகவும் பயனுடையதாய் இருக்கும்.



# உல்லாசமாகப் பயணம் செய்யுங்கள் ஒளி மிகும் தென்னாட்டைக் கண்டு மகிழுங்கள்.



செவிக்கினிய இசை விருந்து. கால் வைக்கவும், சாய்ந்து கொள்ளவும் வசதிகள். சொகுசு மெத்தையோடு கூடிய தனி இருக்கைகள். அத்தனையும் கொண்ட விரைவுப் பேருந்துகள்

மற்றும் குளு குளு. சிறப்புப் பேருந்துகளில் பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இசை விருந்து, வசதியான இருக்கைகள்.

உடைமைகளைப் பாதுகாக்கும் அறை ஓய்வு அறை, மற்றும் பல்வேறு வசதிகளுடன் 24 மணி நேர சேவை.

முன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளுங்கள் அல்லது நேரில் அணுகுங்கள்.

திருவள்ளுவர்
போககுவரத்துக் கழகம்



மககள் தொடர்பு அதிகாரி
**திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்**
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
திருவள்ளுவர் இல்லம், சென்னை-600 002
போன்: 846351, எக்ஸ்டென்ஷன் 28

DIPR/Sobhagya

# தலைவலி தீர செலவில்லாத வழி



**மு. முத்துக்காளத்தி**

[illegible]ந்காலம், இரும்புக்காலம் என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அதுபோல தற்காலத்துக்கு என்ன பெயர் தெரியுமா? இது 'ஆஸ்பிரின் காலம்''. (ASPIRIN) இந்த நூற்றாண்டு ''தலைவலி நூற்றாண்டு'' (HEADACHE CENTURY) தலை இருக்கிறவர்கள் எல்லாருமே தலைவலியால் துடிக்கிறார்கள்.

குப்பனுக்கும் சுப்பனுக்கும் தலைவலி வருவதில்லை. குமாருக்கும் சுந்தருக்கும் வருகிறது. கிராமப்புறங்களில் கிடையாது. நகரங்களில் ஏராளம். ஏழைகளுக்கு வருவதில்லை. பணக்காரர்களுக்கும் பெரிய அதிகாரிகளுக்கும் வருகிறது. வேலைப்பளு, மன உளைச்சல்தான் இதற்குக் காரணம். ஒரு ரகசியம் பல பேருக்குத் தெரியாது. தலைவலி என்பது ஒரு நோயே அல்ல. கடுமையான காயம், நோய் காரணமாக நூற்றில் ஐந்து பேருக்கு வரலாம். மீதி 95 பேருக்கு எதனால் வருகிறது தெரியுமா? மனோவியாகூலத்தால்! உடம்பைவிட உள்ளம்தான் காரணம் தலைவலிக்கு. அப்போதைக்கு ஏதாவது மாத்திரையை வாங்கிப்போட்டு மனிதன் திருப்தி அடைந்து விடுகிறான். தற்காலிக விடுதலையில் ( Relief ) நிம்மதி தேடப் பார்க்கிறான். ஆனால் தலைவலி தொடர் கதையாகிறது.

எப்பொழுதும்விறைப்போடு ( Tension ) வேலை செய்கிறவர்களுக்கு தலை, கழுத்து தசைகள் சுருங்கி, தலைவலி வரும். இந்தத் தசைகள் இரத்த நாளங்களை அழுத்துவதால் உடம்பில் வலி ஏற்படும். வெளியில் பிடுங்கல், வீட்டில் மனைவி, மக்கள் நச்சரிப்பு உள்ளவர்கள் தலைவலிக்குத் தப்ப முடியாது.

ஒரு சமயம் பேரறிஞர் அண்ணா நகைச்சுவையாகக் குறிப்பிட்டார், ''வீட்டில் அடைந்து கிடப்பது தலைவலியையுண்டாக்குகிறது. வெளியே அப்படியே காற்றாடப் போய் விட்டு வருகிறேன்'' என்று மனைவியிடம் கணவன் சொல்லிவிட்டுப் புறப்பட்டால் என்ன பொருள்? 'உன் உபத்திரவத்தால் வந்த நோய் இது. உன்னை விட்டு அப்பாலே போனால்தான் போகும் என்று பொருள்!

வீட்டிலும் வெளியிலும் பணிகளை ஒழுங்குபடுத்திக் கொள்கிறவர்களுக்குத் தலைவலி வராது. சக்திக்கு மீறி வேலை செய்வதும் கூடாது. அப்படிச் செய்யும் பொழுது அவர்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காகவே தலைவலிக்கும். அதனை ஆரம்பத்திலேயே உணர்ந்து மனத்தை வேறு துறையில், பொழுதுபோக்கில் செலுத்த வேண்டும். சண்டைதற்கெல்லாம் கடுமையாக விவாதங்களில் இறங்குவதை விட்டுவிட வேண்டும்.

சாதாரண தலைவலி ஓய்வெடுத்தால் போய்விடும். நல்ல காற்றோட்டத்தில் ரம்மியமான சூழ்நிலையில் மனம் செலுத்தினால் போய்விடும். அப்படிப் போகாமல் தலைவலி கடுமையாக இருந்தால், உடனே நாமாகவே ஆஸ்பிரின் மாத்திரைகளை வாங்கி விழுங்கக் கூடாது. டாக்டரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும். மூளையில் கட்டி, மூச்சுக்குழல் வியாதி, அதிக இரத்த அழுத்தம் போன்றவை இருந்தால்கூட இப்படித் தலைவலி வரலாம். அதனால் கண், காது, மூக்கு, தொண்டை இவற்றைப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

மனிதர்கள் பொதுவாக எதையும் சாப்பிடத் தயாராக இருக்கிறார்களே தவிர, விடத் தயாராக இல்லை. தலைவலி வந்தால் மருந்து சாப்பிடுகிறார்கள். இதனால் பணச் செலவு ஆகிறது. செலவே இல்லாமல் தலைவலி வராமலே பார்த்துக் கொள்ள வழியிருக்கிறது. அதற்கு மனிதர்கள் சிலவற்றை விட வேண்டும். கோபம், எரிச்சல், வெறுப்பு விரோத பாவம், பயம் இவற்றை விட்டுவிட வேண்டும். அப்படி விட்டவர்களுக்குத் தலைவலி ஒருநாளும் வராது. விடாதவர்களை, தலைவலியும் விடாது.

விறகைக் காயப் போடலாம். வயிற்றைக்காயப்போடக்கூடாது. உடம்பைக் குறைக்கிறேன் என்று நீண்ட நேரம் பசியோடு இருக்கக் கூடாது.

வாழ்க்கையில் எப்பொழுதும் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்க வேண்டும். மது, பீடி, சிகரெட், புகையிலை, காபி இவைகளை விட்டுவிட வேண்டும். முற்றிலும் விட முடியாவிட்டாலும் மிகவும் குறைத்துக்கொள்ள வேண்டும். அதைவிட முக்கியம் ,கூட்டமான இடங்களை விட்டு விலகியிருப்பது நலம். இப்படி எச்சரிக்கையுடன் நடப்பவர்கள் பக்கம் எட்டிக்கூட பார்க்காது தலைவலி!

# வரிசையில் வாருங்கள் விரைவாக பயணம் புரிய அது உதவும்

பேருந்து ''ஸ்டாப்பு''களில்
வரிசையாக நின்று
வண்டியில் ஏறுங்கள்.
வரிசை வழி நல்லவழி
அது, நீங்கள் உட்பட,
அனைவருக்கும்
உதவியாக அமையும்.



**பல்லவன்**
**போக்குவரத்துக் கழகம்**
**(பெருநகர்)**
**(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)**
**சென்னை-600 002**

Sobhagya/DIPR



# நூல்நயம்

## நெஞ்சம் கவர் நேருஜி

**ஆசிரியர்:** சுகி சுப்பிரமணியம்,
**பதிப்பாளர்:** அமிழ்தம் பதிப்பகம், நார்த்தாம்பூண்டி, திருவண்ணாமலை வட்டம், வ. ஆ. மாவட்டம், விலை. ரூ 4.50.

எளிய தமிழில், இனிய நடையில் பண்டித நேரு பற்றிய கேள்வி-பதில், பொன் மொழிகள் அவரது வாழ்க்கையில் நடந்த சுவையான சம்பவங்கள் ஆகியவை இந்த நூலில் நிறைந்துள்ளன.

'வரலாறு கண்ட வம்சம்' முதலாக 'நேருஜி சிந்தனைகள்' ஈறாக 29 தலைப்புகளின் கீழ் அருமையான கட்டுரைகள் அரும்புச் சிறுவர்களுக்கு ஏற்ற விதத்தில் எழுதப்பட்டுள்ளன.

மனிதருள் மாணிக்கம் எனப்படும் நேருவின் வாழ்க்கையை முன்நிறுத்தி அவர் தம் வரலாற்றினை நினைக்க வைத்துள்ளார் நூலாசிரியர். இளம் பருவத்தினர் படித்துப் பயன்பெற வேண்டிய நல்ல நூல் இது.

## காய்கறிகளின் மருத்துவக்குணங்கள்

**ஆசிரியர்:** டாக்டர் திருமலை நடராஜன்,
**பதிப்பாளர்:** தமிழ்ச் செல்வி நிலையம், 43, சித்திரைக்குளம் வடக்குத் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004. விலை ரூ. 3.25.

அவரைக்காய் முதல் பச்சை மிளகாய் வரையான 32 காய்கறிகளை நமக்குத் தெரியும் என்றாலும், அவற்றில் என்னென்ன சத்துப் பொருள்கள் அடங்கியுள்ளன, அவைகளை உண்பதால் உடலில் எவ்வாறான மாறுபாடுகளெல்லாம் உண்டாகின்றன என்பது தெரியாதல்லவா?

இந்தக் குறையை நிவர்த்திக்கும் நூலே இது.

முக்கியமாக எந்தெந்தக் காய்கறிகளில் என்னென்ன சத்துப் பொருட்கள் எவ்வளவு விகிதம் உள்ளது என்பதுபற்றியும், அந்தந்தக் காய்கறிகளுக்குள்ள மருத்துவக் குணங்கள் பற்றியும் இந்நூலில் விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

காய்கறிகளையே நம்பியுள்ள தாய்மார்கள் கட்டாயம் படித்துப் பாதுகாக்க வேண்டிய நூல் இது.

## பாரதிக் குழந்தை

[**ஆசிரியர்:** பாலநடராஜன்,
**பதிப்பித்தோர்:** செல்வி பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ. 2.60.]

கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா அவர்களின் அணிந்துரையோடு வெளியிடப்பட்டுள்ள இந்த நூல் சிறுவர் சிறுமியர்க்கென்றே எழுதப்பட்டுள்ளது.

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் வாழ்க்கை வரலாற்றை இளம் வயதினர்க்கு எளிதில் விளங்கும் விதத்தில் எழுதி இந்நூலை உருவாக்கியுள்ளார் ஆசிரியர். கட்டுரைகள் மழலைச் சிறுவர்களின் மனப்போக்கையுணர்ந்து சிறிது சிறிதாகத் தொடுக்கப்பட்டுள்ளன.

சிறிய நூலானாலும், பாரதியார் வாழ்க்கையின் முக்கியச் சம்பவங்கள் யாவும் இதில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## முப்பாலில் முச்சீர் முத்துக்கள்

**ஆசிரியர்:** டாக்டர் கு. மோகனராசு,
**பதிப்பித்தோர்:** வள்ளுவர் கழகம், 9, வேங்கடரங்கம் தெரு, சென்னை-600 005 விலை ரூ. 2.50.

எக்காலத்திற்கும் பொருந்தும் தனிச் சிறப்புற்ற திருமறையான திருக்குறளைப்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எட்டின் தொகுப்பாக விளங்குகிறது இந்நூல்.

குறளுக்குள் சுருக்க வடிவங்களைக் காணும் முயற்சிகள் அவ்வப்போது அறிஞர் பலரால் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில், குறளில் காணப்படும் முச்சீர் முத்துக்களை-அதாவது மூன்று சீர்களில் கருத்து முழுமை பெறும் தொடர்கள் 209 இந்நூலில் தொகுத்து ஆராயப்பட்டுள்ளன.

133 மொத்த அதிகாரங்களில் 85 அதிகாரங்களில் அடங்கியுள்ள மூவகைச் சீர்களைத் தொகுத்து ஆராய்ந்துள்ள நூலாசிரியர் 'எளிய மக்களுக்கும் எளிதில் புரிய வைக்க வேண்டியே வள்ளுவர் முச்சீர் வரும்படிக் குறளை ஆக்கினார்' என்கிறார்.

தமிழறிஞர்கள் படித்துப் பயன் பெறத் தக்க நூலாகும் இது.

## பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகளில் பெண்கள்

**ஆசிரியர்:** திருமதி அரசு மணிமேகலை,
**வெளியிட்டோர்:** தமிழ்க் கடல் பதிப்பகம், 19, டர்ன் புல்சு சாலை, நந்தனம், சென்னை-600 035, விலை ரூ. 7.50.

நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறி, திமிர்ந்த ஞானச் செருக்கு- இவையெல்லாம் கொண்டவர்களாகத் தாய்க்குலத்தார் விளங்கிடவேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்டவர் தந்தை பெரியார்.

பெண்மக்கள் விடுதலையானது வெறும் பேச்சளவில் இல்லாமல் நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என அவர் எண்ணிய எண்ணங்கள், எடுத்துக் கொண்ட முயற்சிகள், மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவை நுண்ணிதின் ஆராய்ந்து அழகுறச் சொல்லப்பட்டிருக்கின்றன இந்த நூலில்.

நூலாசிரியர் தமிழ்ப் பேராசிரியை ஆனதால் தெளிந்த தமிழ் நடை இவருக்குக் கை வந்திருப்பதை நூல் முழுவதும் நம்மால் காணமுடிகிறது.

பெண்ணடிமை தீர்க்கப் பெரு முயற்சி மேற்கொள்வோரெல்லாம் படித்துப் பயன்பெறவேண்டிய நூல் இது.

**—இல. இராசேந்திரன்**

# பத்திரிகைகளின் பார்வையில்

## 'பிஸினஸ் ஸ்டேண்டர்ட்' கல்கத்தா—30-9-'82

தமிழ்நாடு தேர்தல்' என்ற தலைப்பின் கீழ்:

திரையில் மட்டுமின்றி, உண்மை வாழ்க்கையிலும், தான் ஏழைகளின் நண்பன் என்பதைச் சாதாரண வாக்காளர்களுக்கு எம்.ஜி.ஆர். மெய்ப்பித்துக் காட்டியுள்ளார் என்று தெரிகிறது.



## 'டெக்கான் ஹெரால்டு' பெங்களூர்—29-9-'82

'தேசியக் கட்சிகளுக்குப் பெரியகுளம் புகட்டும் பாடம்' என்ற தலைப்பின் கீழ்:

பெரியகுளம் தேர்தல் முடிந்துவிட்டது. திருப்பம் நிகழ்ந்துள்ளது. தமிழ்நாட்டு அரசியலில், தான் வலிமைபொருந்திய சக்தி என்பதை எம்.ஜி.ஆர். மெய்ப்பித்துள்ளார்.

## 'இந்துஸ்தான் டைம்ஸ்'—1-10-'82

'பெரியகுளம் தேர்தல்' என்ற தலைப்பில்:

மகாராஷ்டிராவிலிருந்தோ பிற வட மாநிலங்களிலிருந்தோ தமிழ்நாட்டிற்கு வருவோர், ஏழைகளுக்கு வீட்டு வசதி வழங்குவதிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிப்பதிலும், ஏராளமான கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதிலும் இந்த அரசு எய்திய மிகச்சீரிய முன்னேற்றத்தைக் கவனிக்காமல் இருக்க இயலாது. மத்திய அரசுடன் மோதல் ஏற்படுவதைத் தமிழ்நாடு அரசு தவிர்த்து வருகிறது. பிரதம அமைச்சருடன் கொண்டுள்ள நல்ல உறவு நிலையை எம்.ஜி.ஆர். தெளிவுபடுத்தியுள்ளார்.

மகாராஷ்டிரா அல்லது பீஹாருடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு 1980 தேர்தலுக்கும் பின்னர் மிகச் சிறந்த காலகட்டத்தைப் பெற்றுள்ளது. பம்பாயிலுள்ளதைப் போன்று இல்லாமல் தொழிலாளர் தகராறு குறைந்துள்ளது. பிற மாநகரங்களில் உள்ளதைப் போன்று இல்லாமல் சென்னையில் அரசுப் பணிகள் சீராக இயங்குகின்றன. சட்டமும் ஒழுங்கும் பிற மாநிலங்களில் உள்ளதுபோலன்றி சீராகச் செயல்படுகின்றன. முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மதிநுட்பம் மிக்க அரசியல்வாதி. மத்திய அரசுடன் எவ்வித மோதலையும் தவிர்த்து வருகிறார்.

## 'இண்டஸ்ட்ரியல் எகனாமிஸ்ட்' சென்னை—30-9-82

பெருமை தரும் வெற்றியைப் பெற்று தமிழ்நாடு முதலமைச்சர் மீண்டும் தனக்குக் கிராம மக்களிடையே நிலவும் செல்வாக்கை மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். திரு எம்.ஜி. ராமச்சந்திரனுக்குள்ள செல்வாக்குப் பற்றி எவ்வித ஐயப்பாடும் இல்லை. பெரியகுளம் தேர்தல் முடிவு, அவருக்குத் தனிப்பட்ட முறையில் கிடைத்த வெற்றியாகும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் ஆண்டு முழுவதும் மதிய சத்துணவு அளிக்கும் அவரது திட்டத்திற்கு ஆதரவாகக் கிடைத்த வெற்றியென்றும் கொள்ளலாம். இந்த அரசு நிறைவேற்றும் பல திட்டங்களுடன் இத்திட்டமும் மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

## 'லிங்க்' 10-10-'82

''பெரியகுளம் முடிவு எதை வெளிப்படுத்த முடியவில்லை'' என்ற தலைப்பில்:

தமிழ்நாட்டிலுள்ள பெரியகுளம்நாடாளுமன்றத் தொகுதியில் அ.இ.அ.தி.மு.க. பெற்ற வெற்றி, தமிழ்நாட்டு அரசியலில் தேசிய அரசியல் கட்சிகளின் தகுதிப்பாடு குறித்த விளைவை மீண்டும் எழுப்பியுள்ளது.

## 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 29-9-'82

''பெரியகுளம் தரும் செய்தி'' என்ற தலைப்பில்

பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில்

# பெரியகுளம் இடைத்தேர்தல்

அ.இ.அ.தி.மு.க. இத்தகைய மகத்தான வெற்றி பெற்றது வியப்பை அளிக்கவில்லை.

மதிய உணவுத் திட்டம், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டம், இலவசப் பல்பொடி வழங்கும் திட்டம் ஆகியவை வாக்காளர்களின் நாட்டத்தைக் கவர்ந்துள்ளன. வெற்றி பெற்றபின் மிகுந்த தன்னம்பிக்கை கொண்ட எம்.ஜி.ஆர். இம் மாநிலத்தின் செயல்பாடுகளை மேலும் ஆர்வத்துடனும் உறுதியுடனும் கவனிக்க முடியும்.

**'இந்து' 29-9-'82**

''பெரியகுளம் வழங்கிய தீர்ப்பின் பொருள்'' என்ற தலைப்பில்:

அண்மையில் நடந்து முடிந்த பெரியகுளம் உபதேர்தல், போட்டியிட்ட முக்கியக் கட்சிகளின் தனிப்பட்ட அரசியல் வலிவை அளவிடுவதற்கான வாய்ப்பாக அமைந்துவிட்டது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகத்தான வெற்றி எதிர்பார்த்த ஒன்றுதான். இந்த அரசு நிறைவேற்றும் சமுதாய நலத் திட்டங்கள், அ.இ.அ.தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான திரு எம்.ஜி.ராமச்சந்திரனின் தனிப்பட்ட செல்வாக்கையும் அரசியல் செல்வாக்கையும் உயர்த்தியுள்ளன.

உபதேர்தல் ஒன்றில் உள்ளூர் விவகாரங்களும் தனிப்பட்ட செல்வாக்கும் ஓங்கிநிற்கும் எனினும் இம்மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கும் சமுதாய நலத் திட்டங்களுக்கும் அளிக்கப்பட்ட ஊக்கமாகவே எடுத்துக் கொள்ளப்படவேண்டும். குறிப்பாக, இலவச மதிய சத்துணவுத் திட்டம் 65 லட்சம் பள்ளிக் குழந்தைகளுக்குப்பயன்படும்வகையில்செயலாக்கப்பட்டபின்னர் நடந்த இத் தேர்தல், மிகவும் சிறப்பு வாய்ந்த இச் சமுதாய நலத் திட்டத்திற்கு மக்கள் வழங்கிய நல்ல தீர்ப்பாகக் கருதப்பட வேண்டும். பெருவாரியாக ஏழ்மை தவழும் நமது சமுதாயத்தில், ஆதரவற்ற முதியோருக்கு இலவச உணவு அளிப்பதாகவும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவருக்கு வேலை அளிப்பதாகவும் முதலமைச்சர் அறிவித்தது உண்மையில் மக்கள் நாட்டத்தைக் கவர்ந்துள்ளது.

**'ஹிதவாடா'-நாகபுரி 30-9-'82**

பெரியகுளம் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. பெற்ற மகத்தான வெற்றி, அக்கட்சியை எதிர்த்த மூன்று கட்சிகளுக்குப் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

**26-9-1982ஆம் நாளன்று நடைபெற்ற பெரியகுளம் தொகுதி நாடாளுமன்ற இடைத்தேர்தல் முடிவுகள்:**

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் ... | 7,75,656 |
| பதிவான மொத்த வாக்குகள் .. | 5,13,815 |
| பதிவான வாக்குகளின் சதவீதம் | 66.24 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 5,07,681 |
| தள்ளுபடியான வாக்குகள் ... | 6,134 |
| தள்ளுபடியான வாக்குகளின் சதவீதம் ... | 1.19 |
| வைப்புத்தொகையை இழந்த வேட்பாளர்களின் எண்ணிக்கை | 23 |
| வெற்றி பெற்ற வேட்பாளர் பெயரும் அவரது கட்சியும் | திரு.எஸ்.டி.கே. ஜக்கையன், அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. |
| வெற்றி பெற்ற வேட்பாளர் பெற்ற வாக்குகள் | 2,52,377 |

ஓட்டுப் போட காத்திருந்த பெண்கள் 'கியூ' வரிசை.







# காட்டு வளமே நாட்டு நலம்!

தமிழ்நாடு ஆளுநர் மாளிகை அமைந்துள்ள அந்தப் பகுதியில்-

மறைந்த தலைமையமைச்சர் நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது 'குழந்தைகள் பூங்கா.'

காந்தி மண்டபம், மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர் ஆகியோருக்கு அமைந்த நினைவகங்கள் போன்றவைகளால் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் அப்பகுதியில் 'குழந்தைகள் பூங்கா' அமைக்கப்பட்டது. அது தேசியப்பூங்காவாக வளர்ந்துள்ளது.

வன விலங்கு உய்விடமாகத் திகழும் கிண்டி தேசியப் பூங்கா, முட்புதர்கள் நிறைந்த வனமாகும். இங்கே பிளாக்பக் (Black Buck) புள்ளிமான், குள்ளநரிகள், பாங்கோலின் (Pongolin) மற்றும் பலவகைப் பறவைகளும் உள்ளன. இந்த வனவிலங்கு உய்விடத்தை ஆண்டு முழுவதும் பார்க்கலாம்.

**அட்டை சொல்லும் செய்தி**

இந்தியாவிலுள்ள மாநிலத் தலைநகரங்களிலேயே இயற்கைச் சூழ்நிலையில் வனவிலங்கு உய்விடமாகத் தேசியப்பூங்கா அமைந்துள்ள நகரம் சென்னை மாநகரம்தான். தமிழ்நாட்டு வனத்துறைதான் இந்தியாவில் தொடங்கப்பட்ட தொன்மையான வனத்துறை ஆகும்.



சென்னை மாநகரத்தின் ஒரு பகுதியே வனவிலங்கு உய்விட மாகத் திகழ்வது - இயற்கைச் சூழ லில் அமைந்திருப்பது - சிறப்பான ஒன்றாகும்.

இப்பகுதியில் தான் அக்டோ பர் திங்கள் முதல்நாள் அனைத்து இந்திய வனவிலங்குப் பொருட் காட்சியை மேதகு ஆளுநர் திரு. எஸ்.எல். குரானா தொடங்கி வைத்தார்.

இவ்விழாவின் நினைவாக மேதகு ஆளுநரும் மாண்புமிகு முதல்வரும் சிவப்புச் சந்தன மரக்கன்றுகளை நட்டார்கள். மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் 'டேலோனிக்ஸ்' எனப்படும் மரக்கன்றை நட்டார்.

விழாவுக்கு வந்திருந்த அனை வரையும் வனத் துறைத் தலை வர் திரு அச்சையா வரவேற்றார்.





அனைத்து இந்திய வன விலங்குக் கண்காட்சி துவக்க நாளான 1-10-82 அன்று சென்னை தேசியப் பூங்காவில் விழா நினைவாக மேதகு ஆளு நரும் மாண்புமிகு முதல்வரும் மரக்கன்றுகளை நட்டார்கள்.






**வனவிலங்கு வார விழாவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு அஞ்சல் தலையை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 1.10.82 அன்று சென்னை அண்ணாசாலை அஞ்சலகத்தில் வெளியிட்டார்கள்.**

அவர் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது

''தமிழ்நாட்டின் வனத்துறை மிகப் பழமையானது. 1882ஆம் ஆண்டில் வனத்துறைக்கான சட்டம் இயற்றப்பட்டது. 1912ஆம் ஆண்டில் வனஇயல் கல்லூரி தொடங்கப்பட்டது.

''மொழிவழி மாநிலம் அமைக்கப்பட்டதால் பழைய சென்னை மாநிலத்திலிருந்த கொள்ளேகாலம், மலபார் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டதால் வனச் செல்வம் குறைந்தது. எனினும் 1960 முதல் 1980ஆம் ஆண்டு வரை வன வளம் பல்வேறு திட்டங்களால் பெருக்கப்பட்டு, நாட்டில் சிறந்த வனத்துறைகளில் ஒன்றாகத் தமிழ்நாடு வனத்துறை விளங்கி வருகிறது.''

வனத்துறைத் தலைவர் உரையாற்றிய பின்னர் வனவிலங்குகள் போன்று வேடமிட்டவர்கள் மாலை அணிவித்தனர். ''எங்களையும் வாழவிடுங்கள்'' என்று வனவிலங்கு வாரவிழாவில் முழங்கும்விலங்குகளே நேரில் வந்து மாலையிடுவது போல் இருந்தது.

விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

''இந்திய வனத்துறை வரலாற்றில் தமிழகவனத்துறைக்குச் சிறப்பான இடம் உண்டு. மத்திய அரசு தமிழ்நாட்டில் முதன் முதலாக அனைத்து இந்திய வனவிலங்குக் கண்காட்சியை நடத்திட உதவியுள்ளது. 1882ஆம் ஆண்டு உருவாகிய வனத்துறையின் பணி எல்லாரும் பாராட்டும் வகையில் சிறப்பாக இயங்கி வருகிறது.

''சென்னை மாநகரத்திலேயே

இப்படி ஓர் அழகிய காடு அமைந்துள்ளது. இதுபோன்ற அழகிய காடு வேறு எந்த மாநிலத் தலைநகரிலும் இல்லை.

"இயற்கைச் சூழலைக் காப்பாற்றினால்தான் மனிதனுக்கு எதிர்காலம் உண்டு. வனவிலங்குகளை வேட்டையாடும் கொடிய பழக்கத்தை அடியோடு மனிதர்கள் விடவேண்டும்.

"ஆண்டுதோறும் 2000 டன் சந்தன மரங்களைப் பெற்றிடும் அளவுக்குத் தமிழக வனத்துறை உள்ளது. ஆனால் தமிழ்நாட்டை விட அதிக அளவு வனவளம் உள்ள மாநிலங்கள்கூட இவ்வளவு சந்தன மரங்களைப் பெற முடியவில்லை. அந்த அளவுக்கு நமது வனத்துறை சிறப்புடன் செயலாற்றி வருகிறது.

"வனத்துறையின் காவல்பணிகளுக்கு நமது காவல்துறையும் உதவி வருகிறது"

கண்காட்சியைத் தொடங்கி வைத்த மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

"ஒரு நாடு வளம் பெறுவதற்கும் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பதற்கும் வன விலங்குகளையும் இயற்கைச் சூழ்நிலைகளையும் பாதுகாக்கவேண்டும்.

நம்நாடு உலகிலேயே ஏழாவது பெரியநாடு. கடந்த ஐம்பது ஆண்டுகளில் பலவகை விலங்கினங்களும் பறவைகளும் மறைந்துவிட்டன. சுற்றுப்புறச் சூழ்நிலைகளின் மாற்றங்களால் இந்தநிலை உருவாகிவிட்டது.



"வனத்துறை நம் நாட்டுக்குப் பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டும். இயற்கைச் செல்வங்களைப் போற்றிப் பாதுகாத்தலே வளமான வாழ்வைத் தரும். இந்நோக்குடன் தமிழ்நாடு வனத்துறை அரும்பணியாற்றி வருவது மகிழ்ச்சிக்கு உரியது, பாராட்டுக்குரியது"

அடுத்து, காவல்துறை இயக்குநர் திரு. கி. இராதாகிருஷ்ணன் அவர்கள், வனத்துறையின் பாதுகாப்புப் பணிகளுக்கும் காவல் துறை ஆற்றிவரும் உதவிகளை விளக்கினார். வனவிலங்குகளைப் பாதுகாக்கும் நமது தொன்றுதொட்ட பணிகளையும் எடுத்துரைத்தார்.

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு முதல்வர் தமது உரையில், புதிதாகப்பதவியேற்ற ஆளுநர் அவர்களுடன் தாம் பங்கேற்கும் முதல் பொது நிகழ்ச்சி இது என்பதை நினைவூட்டினார். மேலும் அவர் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"நாம் வாழ்வதற்கு உயிரினங்கள் எந்த அளவுக்குத் துணை புரிகின்றன என்பதை நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அப்படி இருந்தாலும் அதில் நாம் அக்கறை காட்டுவதில்லை.

"தேள் கொட்டி விடுகிறது என்று அடித்துக்கொல்லுகிறோம். ஆனால் விஷப் பூச்சியைக் கொல்லுவதற்குத் தேள் தேவைப்படுகிறது. இப்படி ஒவ்வொரு உயிரினமும் ஒவ்வொரு வகையில் உதவி புரிகின்றது. இப்படிச் சொல்லுவதால் ஏதோ பெரிய ஆராய்ச்சியில் இறங்குகிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம்.

"ஒரு தடவை மைசூரில் படப்பிடிப்புக்காகச் சென்றபோது, கொக்குகளைத் துப்பாக்கியால் 15 அல்லது 20 முறை எளிதாகச் சுட்டும் அது குறி தவறிப்போய் விட்டது. படப்பிடிப்பும் முடியும் கட்டம் வந்தது. அப்போதும்கூட மிக அருகில் இருந்து ஒரு கொக்கைக் குறிபார்த்துச் சுட்டேன். அது கீழே விழவில்லை. ஏன் என்றால் குண்டு வெடித்தால்தானே? அன்று முதல் இந்தப் பழக்கத்தை அடியோடு விட்டு விட்டேன்.

"அப்படி வன விலங்குகளை வேட்டையாடுவது தேவைதானா என்று சிந்தித்துப் பார்த்தால் எப்படிப்பட்ட இழி செயலைச் செய்தோம் என்று நாமே வெட்கப்படுவோம்.

"அதனால்தான் என்னையே நான் உதாரணமாக்கிக் கொண்டேன். ஒரு தடவை பழக்கமாகிவிட்டால் அது வழக்கமாகிவிடுகிறது. இப்படி வன விலங்குகளை வேட்டையாடுவதால் நாட்டின் வளம் பாழாகிறது.

"சென்னையில் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். இதற்குக் காரணம் நன்றாக இருந்த மரங்கள் எல்லாம் வெட்டி வீழ்த்தியதால் என்பது புலப்படுகிறது. இதே தவறை நாமும் செய்து, வருகின்ற தலைமுறையினருக்குக் கஷ்ட நஷ்டங்களை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத் தான் காடுகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

"சத்துணவுத் திட்டத்தால் பயன்பெறும் 9 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அடுத்த கட்டமாகத் தோட்டக்கலையும் சொல்லிக் கொடுக்கப்படும். இப்படிச் சொல்லிக் கொடுத்து அவரவர்களுக்கு இவ்வளவு என்று பிரித்துப் பராமரிக்க விட்டுவிட்டால் போட்டி மனப்பான்மை ஏற்பட்டு, காய்கறி உற்பத்தி பெருகும்.

"அவரவர்கள் வீட்டுத் தோட்டத்தில் காய்கறி போட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவர்க்கும் ஒரு பகுதி என்று பிரித்துப் பராமரித்தால் காய்கறி உற்பத்தி அதிகரிக்கும்; வீட்டுத் தேவையும் பூர்த்தியாகும்.

"தமிழ்நாட்டில் 1 கோடி டன் விறகு தேவைப்படுகிறது. 1 லட்சம் டன் விறகுதான் கிடைக்கிறது. அதனால் விலை ஏறுகிறது. இதை எப்படி அதிகரிப்பது? மரங்கள் வளர்ச்சி பெற்றால்தானே? மரங்களை அடியோடு வெட்டிக் கொண்டே போனால் என்ன ஆகும்? இதை யாரும்புரிந்து கொள்வது இல்லை.

"வனத்தைப் பாதுகாப்பது நாட்டின் வளத்தைப் பாதுகாப்பது என்பதை அனைவரும் உணர வேண்டும். மிருகங்களைப் பாதுகாப்பது வரலாற்றைப் பாதுகாப்பது போன்றதாகும்."

முதல்வரின் உரை முற்றிலும் உண்மை என்பதை அங்குக் கூடியிருந்த மக்களின் மலர்ந்த முகங்களே காட்டின. விழா அமைப்பும் நிகழ்ச்சிகளும் உரைகளும் மீண்டும் மீண்டும் நமக்கு நினைவூட்டின.

வனப் பாதுகாப்பே-நாட்டின் வளப் பாதுகாப்பு!

—மாமூலன்

உங்களுக்குப் பிடித்தமாய் இருக்கும் எந்த மனை வேண்டுமாயினும் வாங்குங்கள். ஆனால் வாங்குமுன் அந்த மனை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதல பெற்றுள்ளதா என்பதையும், அபிவிருத்திக் கட்டுப்பாடு விதிகளுக்குட்பட்டு உங்களின் திட்டம் பூர்த்தியாகுமா என்பதையும் கவனித்து செயல்படவும்.

குறிப்பாக :

- நீங்கள் திட்டமிட்டுள்ள அபிவிருத்திகளை அந்த மனையில் செயய, விதிகளின்படி முடியுமா ?
- மனை உபயோகம் — தளப்பரப்பு பின்புற வெளியிடங்கள் இவைகள் விதிகளின்படி அமைந்துள்ளதா ?
- மனைப் பிரிவின் பரப்பளவு விதிகளின்படி இருக்கிறதா ?
- பொதுச் சாலையிலிருந்து நேரடி அணுகு வழி உண்டா ?
- நீங்கள் திட்டமிட்ட அபிவிருத்திக்கு ஏற்ப அடிப்படைத் தேவைகள் அம்மனையில் உண்டா ?

அபிவிருத்திக் கட்டுப்பாடு விதிகள் உங்களுக்காகவே. இவற்றை மீறாதிருத்தல் உங்களுக்கு நன்மை யினைத் தரும்.

இதன் தொடர்பாக மேலும் தகவல் மற்றும் ஆலோசனை ஏதும் பெற விரும்பினால் உதவி புரிய MMDA.

மேன்மையானதொரு சென்னைப் பெருநகரை உங்களுக்கெனவே உருவாக்கிடும் . . .

MMDA

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

52, E.V.K. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை-600 007.
தொலைபேசி எண் : 28881





ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!

தமிழரசு
16-10-1982
Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

